# வெளிச்சம்

சித்திரை - 1993

20/=




விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

உங்களின் அனைத்துத் தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்



தமிழருவி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அகராதியில் அழித்தெழுதிக் கொள்ளுங்கள்,
பூபதி அம்மா...
ஒரு பெண்ணின் பெயரல்ல ..
பூகம்பத்துக்குப் புதுப்பெயர்.
இவள்,
காலக்குரலுக்கு,
சேலைகட்டிய தோற்றம்.
ஊரெங்கும் ஓநாய்கள்,
ஊளையிட்ட போது,
தன்னந்தனியனாக தடியெடுத்து விரட்டியவள்.
எமது சுற்றுப் புறச் சூழலை,
அந்நியக் காற்று அசுத்தப்படுத்திய போது,
ஊத்தைக் காற்றின் உரிமையாளர் மீது,
வழக்குத் தொடுத்து வாதிட்டவள்.
இங்கு அதிகமானோர் மௌனித்திருந்த போது,
''புலிகள் எங்கள் பிள்ளைகள்.
அவர்களே எங்கள் பாதுகாவலர்கள்''
என்று,
வாய் திறந்து பாடிய விடுதலைக் குயில்,
சக்தி,
வலுப்பொருள்.
விஞ்ஞானம் இப்படி விதந்துரைக்கிறது.
சக்தி,
தாய்மையின் வடிவம்.
மெஞ்ஞானம் இப்படி முழக்கமிடுகின்றது.
எப்படிப் பார்த்தாலும்
பூபதி அம்மா. பூரண வடிவம்.

□□

மொழிகளுக்குள்ளே தமிழே மூத்தவள்.
எங்கள் மொழிக்குள்ளே எல்லாம் அடங்கும்.
தமிழில் இல்லாதவை உலகில் இல்லாதவையே
இப்படிப் பெருமைப்பட்டுக் கொள்வோர் இன்னும் எம்மிடையே நிறையவே உள்ளனர்.

தமிழ் அழகான மொழிதான்.
வளமும் தொன்மையுமுடையதுதான்.

தமிழ் எங்கள் தாய்மொழி என்பதிலே நாங்கள் தலை நிமிர்ந்து கொள்ளலாம். என்றாலும், தமிழுக்கு எம் முன்னோர்கள் ஆடைகட்டி அழகுபார்த்தார்கள். சிலம்பும், குண்டலமும், சிந்தாமணியும், முத்தாரமும் செய்தளித்து தமிழைச் சித்திரப் பதுமையாக்கினார்கள். இன்னும் இன்னும் எத்தனையோ சூட்டி எழிலாக்கினார்கள். ஆனால் நாங்களோ 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எம் தமிழிருந்த அழகைப்பாருங்கள்' என்று சொல்லிச் சொல்லியே புதிதாக தமிழுக்கு ஒன்றும் செய்தளிக்காது பழையன பேசும் பண்பிலூறி பரம்பரைப் புகழ்பாடும் பண்ணையாளர்கள் ஆகிவிட்டோம்.

உலகம் விஞ்ஞான மயப்பட்டு விண்தொட நிமிர்ந்து விட்டது. அண்டங்களை அளந்தும், அணுவைப்பிளந்து ஆய்ந்தும், நவநவமானவற்றை உலக மொழிகள் பல உள்வாங்கி உன்னதமாகிவிட்டன. தமிழ்மொழி மட்டும் பாட்டன் காலத்துப் பழமொழிகளுடனும், தெனாலிராமன் காலத்துப் பகிடிகளுடனும் தேங்கிவிட்டது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி தமிழ் அப்படி இருந்தது, இப்படி இருந்தது என்று பட்டிமண்டபம் பேசுவதுடனேயே திருப்தியடைந்து புதியன தேடிப் புறப்படாதிருக்கின்றோம். இதைத்தான் பாரதி,

> "மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
> மேற்குமொழிகள் புவிமிசை ஓங்கும்" என்றானோ?

பாட்டென்றால் பாரதி,

சிறுகதை என்றால் புதுமைப் பித்தன்,

நாவலென்றால் கல்கி என்று இன்றுவரை ஒருநடைமுறைக் கணக்கு எங்கள் இலக்கிய வங்கிகளின் கணக்கில் வைப்பீட்டில் உள்ளது. இந்தக் கணக்கைமாற்றி புதிய கணக்கொன்றை ஆரம்பிக்கவேண்டியதேவை தமிழீழக் கலை, இலக்கியப் படைப்பாற்றலருக்கு ஏற்பட்டுள்ளது.

வீரத்துக்கும், விடுதலை வேட்கைக்கும் தமிழீழமே உதாரணம் என்று உலகம் ஏற்றுக் கொண்டதுபோல, புதியதமிழின் புலர்வுக்கும், நவீன தமிழின் உருவாக்கத்துக்கும் தமிழீழமே வித்திட்டது என்று உலகம் விதந்துரைக்க வேண்டும் என்று 'வெளிச்சம்' விரும்புகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கங்களான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், நிதர்சனம், புலிகளின் குரல் வானொலி, விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவு என்பன எமது கலை, பண்பாட்டு வாழ்வியல் சிறப்பம்சங்களில் மேம்பாடுகாண்பதற்காக செயற்பட்டு வருகின்றன. இவற்றின் செயற்பாடுகள் ஒவ்வொன்றின் பெறுமதியையும் இன்று உலகத் தமிழ்மக்களும் உணரக் கூடியதாகவுள்ளது.

தமிழையும், தமிழ்த் தேசியத்தின் அடையாளங்களைப் பேணவும் அவற்றைக் காலத்துக்கு ஏற்ப வளர்த்தெடுக்கவும், தமிழரின் வாழ்ரிமைப் போராட்டத்துடன் இணைத்துப் பலதிட்டங்களை ஏற்படுத்தியுள்ளோம். இத்திட்டங்களின் வெற்றிக்காக வெளிச்சம் அனைத்துப் படைப்பாளிகளையும் அரவணைத்துச் செல்ல ஆசைப்படுகின்றது.

வெளிச்சம்

சித்திரை — 1992

இதழ் — 13

# அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

உலக விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது தமிழீழ சுதந்திரப் போராட்டம் தனக்கே உரித்தான தனித்துவச் சிறப்பம்சங்களைக் கொண்டது. உலக வரலாற்றில் எவருமே சாதிக்காத, எங்குமே நிகழ்ந்திராத, அற்புதமான அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது போராட்ட வரலாறு அமையப் பெற்றிருக்கிறது. இதுவே அதன் தனித்துவச் சிறப்பம்சமாகும்.

இந்த மகத்தான தியாக வரலாற்றில் அன்னை பூபதியின் அர்ப்பணிப்பு ஒப்பற்றது.

ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும், அலாதியான தேசியப் பற்றுணர்வாகவும் அன்னையின் அறப்போர் அமைந்தது. தர்மத்தின் குரலாக, தனித்து நின்று அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் அதர்மத்தை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விடுத்தார்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். அவர்களே சரித்திரத்தையும் படைக்கிறார்கள். அன்னை பூபதியும் ஒரு சரித்திரத்தைப் படைத்தார். ஒரு தனித்துவமான, காலத்தால் சாகாத சரித்திரத்தைப் படைத்தார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 31-3-1992ல் 'தமிழீழ ஈகச்சுடர்' நூலுக்கு வழங்கிய செய்தியிலிருந்து)

சிறுகதை

# கல்லறை தழுவும் காற்று

சொர்ணகுமார்

சுழன்றடித்தது பேய்க் காற்று. அதன் வேகத்தினால் வானத்தில் வீசப்பட்டவாறு ஓடித்திரிந்தன முகிலினங்கள். சூரியன் கூட காற்றின் வேகத்தினைக் கண்டு பயந்துவிட்டான் போலும், கரிய மேகங்களின் பின்னால் ஒழிந்து கொண்டிருந்தான்.

காற்றின் வேகத்தினால் சருகுகளெல்லாம் தூக்கியெறியப்பட்டன. மரங்களையெல்லாம் காற்று பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது. தென்னை மரங்களோ காற்றின் கோபத்தின் காரணம் புரியாது தலை முடிகளை பிய்த்துக்கொண்டன. ''ஏன் இப்படி அடிக்கிறாய்'' துணிந்து கேட்டது ஒரு மரம். அவ்வளவுதான் அடித்த அடியில் படுத்தே விட்டது.

காகங்கள் மட்டுமே துணிந்து தாளப்பறந்தன. ஏனைய பறவைகளெல்லாம் வெளியே செல்லமுடியாது தவித்தன. தமது கூடுகள் வீழ்ந்துவிட்டதாலும் தம் குஞ்சுகளுக்கு இரையூட்ட முடியாமலும் கலங்கின. கடலிடம் சென்று முறையிடுவது எனத்தீர்மானித்தன.

காற்றின் இணைபிரியாத தோழன் கடல். காற்று கோபப்பட்டால் கடல் பொங்கியெழும். அதுபோல் கடல் கோபப்பட்டால் காற்றும் வீசியடிக்கும். இவ்வாறு உணர்வால் ஒன்றுபட்டவை காற்றும் கடலும். எனவேதான் பறவைகள் தம் கவலையை கடலிடம் கூறின.

பறவைகளின் கவலையை அனுதாபத்தோடு கேட்டது கடல். தன்னுள் முகம் புதைத்து அழுத பறவைகளை தேற்றி அனுப்பியது. ஆனால் காற்றின் கோபத்திற்கான காரணம் கடலிற்கும் தெரியவில்லை. அதனிடமேயே கேட்பது எனத் தீர்மானித்தது.

தன் அலைக்கரங்களால் வருடியபடியே கேட்டது. ''நண்பா என்ன கோபம், உலகே உன்வால் நடுங்குகிறது பார்'' கடலின் ஆதரவு காற்றிற்கு ஆறுதலளித்தது. சற்றே சாந்தமானது. தன் மனக்குமுறலையெல்லாம் கொட்டித்தீர்க்க அருமை நண்பன் வந்ததால் ஆறுதல் அடைந்தது. தன் சோகத்தை கூறத் தொடங்கியது. ''நண்பா கால காலமாக, இறந்த உடல்கள் புதைக்கப்படுவதும் எரிக்கப்படுவதும் உனக்குத்தெரியும்.'' ''ஓம் கிறிஸ்தவர்கள் புதைப்பார்கள் இந்துக்கள் எரிப்பார்கள்'' என்றது கடல். ''ஓம் நீண்ட காலமாகவே இப்படித்தான் நடக்கிறது. ஆனால் சமூகத்தில் அன்றிலிருந்து இன்றுவரை சுயநலவாதிகள், பாவிகள்,

கோழைகள்தான் பெருமளவில் உள்ளார்கள், இவர்கள் எரிக்கப்படும் போது என்னுடன் கலப்பர். புதைக்கப்படும்போது மண்ணுடன் கலப்பர். இவர்கள் கலப்பதாலேயே நாங்கள் எம் தூய்மையை இழந்து வந்தோம், கவலைப்படுவதை தவிர எம்மால் என்ன செய்ய முடியும்'' பெருமூச்செறிந்தது காற்று.

''ஓம் அதற்கு இப்போது என்ன வந்தது'' கடல் குறுக்கிட்டது. ''இப்போது சமீப காலமாகத்தான் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் வேங்கைகள் இங்கே இருக்கிறார்கள். போராட்டத்தில் ஈழத்திற்காக உயிரை தந்துவிட்டு இவர்கள் என்னோடு கலக்கையில் நான் எவ்வளவு தூய்மையடைகிறேன் தெரியுமா? என்னே அவர்களது வீரம், என்னே அவர்களது இலட்சியம்; உறுதி அடடா'' வேங்கைகளின் தியாகத்தில் தன்னையே மறந்தது காற்று.

''இதற்கும் உன்கோபத்திற்கும் என்ன தொடர்பு'' - காற்றின் சிந்தனையை கலைத்தது கடல். ''இதுவரை கிறிஸ்தவ போராளிகளைப் புதைத்தனர். இந்துப் போராளிகளை எரித்தனர். இனிமேல் எல்லோரையும் எரிக்கப்போகிறார்களாம்'' சொல்லும்போதே காற்றின் கண்கள் கலங்கிவிட்டன.

''நண்பா போராளிகள் நாட்டின் சொத்து, மக்களின் கண்கள், அவர்களுக்கு மதவேறுபாடு கிடையாது'' ஆறுதல் படுத்தியது கடல். ''அப்படியென்றால் எல்லாரையும் எரிக்கலாம்தானே'' சீறியது காற்று. ''என்ன நண்பா புரியாமல் பேசுகிறாய். அவர்கள் நினைவுச்சின்னங்களாக நிலைக்கவல்லவா அவர்களை புதைத்து நினைவுச்சின்னங்கள் கட்டுகிறார்கள். அவை மற்றையோருக்கும் உணர்வு ஊட்டுகிறதல்லவா'' கடல் சொன்னது.

இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மண்ணினால் பொறுக்க முடியவில்லை. காற்றின்மேல் அனுதாபமாக இருந்தது. ஆனால் இவன் போராளிகளை புதைப்பதை தடுத்துவிடுவானோ என பயமாகவும் கோபமாகவும் இருந்தது. தயங்கியபடியே கூறியது. ''அவர்கள் எனக்காக மரணித்தவர்கள் என்னுடன் கலப்பதுதானே நியாயம்'' ''அடேய்'' -பொங்கியெழுந்தது காற்று. மண் மீது ஒரே பாய்ச்சல் மண் தனது தூசிமேலாடைகள் கிழிந்துபோக விலகிக்கொண்டது.

காற்று கோபம் அதிகரித்ததாக வெறியாட்டம் போட்டது. கடல் எவ்வளவோ சொல்லிப்பார்த்தது. ''போராளிகளின் நினைவுச் சின்னங்கள் ஈழத்தை புனிதப்படுத்துமல்லவா, அவர்களின் நினைவுகளே ஈழத்தை நல்வழியில் கொண்டு செல்லுமல்லாவா'' என்று கூறியதையெல்லாம் காற்று பொருட்படுத்தவில்லை. கடலுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

உண்மையில் அதற்கும் கவலைதான், போராளிகளின் உடல்கள் எரிக்கப்பட்டு சாம்பல் தன்னுடன் கலக்கப்படுவது இனிமேல் நடக்காது என எண்ணும்போதே அதன் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. இதற்காக தன்னையே நொந்துகொண்டு தன் தலையை பாறைகளில் மோதியது. அழுது அழுது ஆறுதல் அடைந்தது.

பொதுவாகவே கடல் சோகங்களைத் தாங்கிக் கொள்ளும். விளைவுகள், காரணங்களை சிந்திக்கும். ஆனால் காற்றோ மென்மையானது. எளிதில் உணர்ச்சி வசப்படும். அதன் சோகத்தால் வந்த கண்ணீர் புவியில் மழையாகி வீழ்ந்துகொண்டிருந்தது.

சுழன்றடிக்கும் காற்றையும் பேய் மழையையும் பொருட்படுத்தாது வீதியால் மூன்று உருவங்கள் சென்றுகொண்டிருந்தன. அவர்களைத்தவிர எல்லா இடங்களும் வெறிச்

சோடியிருந்தன. மூன்று பேரினதும் முகங்கள் வாடியிருந்தன முன்னால் வந்துகொண்டிருந்த பெண்ணிற்கு பதினைந்து வயது இருக்கலாம். பின்னால் வந்துகொண்டிருந்த தந்தையின் தலையில் ஆங்காங்கே நரைமயிர்கள் முளைவிட்டிருந்தன. அவர் பக்கத்தில் வந்த தாயின் முகத்திலும் சுருக்கங்கள் காணப்பட்டன.

மூவரின் முகத்திலும் தொலைதூரத்திலிருந்து வந்த களைப்பும் தம் குடும்பத்தவனை இழந்துவிட்ட சோகமும் தெரிந்தன. தனது இந்த ஆர்ப்பாட்டங்களிற்கு ஊடாகவும் வந்துகொண்டிருக்கும் அவர்களைப் பார்க்க காற்றிற்கு ஆச்சரியமாக இருந்தது. "யார் இவர்கள், என்ன செய்கிறார்கள்" அவதானித்தது காற்று.

அம்மூவரும் மாவீரர் துயிலும் இல்லத்தினுள் நுழைந்தனர். வரிசை வரிசையாக அணிவகுத்து தமிழீழத்தின் செல்வங்கள் துயின்று கொண்டிருந்தன. நினைவுச்சின்னங்கள் எழுப்பப்பட்டு கருங்கற்களில் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த அமைதியான இடத்தில் துயிலும் மாவீரர்களை கண்டதுமே அந்த தாயின் சோகம் அழுகையாக வெடித்தது. அவள் பெற்ற பிள்ளைகளில் ஒருவனும், பெறாத பிள்ளைகள் பல நூறும், இங்கு தூங்கிக் கொண்டிருந்தனர். பத்துமாதம் சுமந்து பெற்ற பாசம் அவளுக்குத்தானே தெரியும்.

இவர்களிற்கூடாக அவர்கள் தம் குடும்பத்தவனைத் தேடினர். "அண்ணா" என கதறியபடி ஓடிய பெண்ணைத் தொடர்ந்து பெற்றோர் அவன்முன் மண்டியிட்டுக் கதறினர். அவர்களோடு சிரித்தவன், பேசியவன் அம்மா பசிக்குது என்றபடி ஓடிவந்து சோற்றை குழைத்து ஊட்டும் போது வேண்டுமென்றே கையையும் சேர்த்துக் கடித்தவன், பின்னேரத்தில் தாயம் விளையாடும்போது தான் தோற்கும் கட்டத்தில் காய்களை குழப்பிவிட்டு சண்டைபோட்டு தங்கைக்கு அடித்தவன் இன்று அமைதியாக அவர்கள் கதறக் கதற தூங்கிக் கொண்டிருந்தான்.

"அண்ணா, நீ திரும்ப வரமாட்டயா அண்ணா, ரவிச்சித்தப்பாக்கு பொம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கண்ணா, அதைப்பார்க்கவும் வரமாட்டாயா" அழுது அழுது முகங்கள் சிவந்தன. தகப்பன் எதற்குமே அழுதிருக்கமாட்டார். அவரே விம்மியபடி மகன்மேல் பூக்களைத் தூவினார். அவர்கள் ஊர்ப் புதினங்களையும், சித்தப்பாவின் குழந்தைபற்றியும் மாமாவின் மகள் அவன் வழியில் சென்றதையும் அவனுக்கு கூறிக்கொண்டிருந்தனர்.

காற்றிற்கு என்னமோ போலிருந்தது. "அவனை எரித்திருந்தால் ... இவர்கள் எங்கு சென்றழுவார்கள். எதைப் பார்த்து ஆறுதலடைவார்கள்" சிந்தித்தது காற்று.

"இவர்கள் புதைக்கப் படத்தான் வேண்டும், நினைவுச் சின்னங்களாக நிலைக்க வேண்டும்" தீர்மானித்தது அன்றிலிருந்து காற்று வீரமரணமடையும் போராளிகளை தழுவி முத்தமிடுவதுடன் திருப்தியடைகிறது. அதனால் தான் மாவீரர் துயிலும் இல்லங்களில் எப்போதும் காற்று சுகந்தமாக வீசிக்கொண்டேயிருக்கிறது.

நன்றி: புலிகளின் குரல்

□□

வந்திறங்கி,
சந்தடிமிக்க எந்தன் ஐரோப்பிய
நகரத்துத் தெருவொன்றில்
''ஆ'' வென வாய் பிளந்து
வானுயரும் வண்ணமிகு கட்டிடங்களை
பார்த்து நிற்கும்
ஈழ தேசத்தவனே!
நன்றாய், மிக நன்றாய் உற்றுப்பார்!
அவற்றினுள்ளே அவற்றை
தாங்கி நிற்கும் பொருள்கள் தெரிகிறதா?
உள்ளோடிப் பார்,
என் தந்தையின்
பாட்டனின்; பாட்டனின் பாட்டனின்
எலும்புகள்.
இரும்புகளைச் சுற்றி அப்பியிருக்கும்
சீமெந்து மட்டுமென்ன?
என் மூதாதையரின் தசை அணுக்கள்;
உயிர்ப்பொருள்கள்.
அவர்கள் இரத்தமே நீராய் ஊற்றப்பட்டது.
நிரந்தர இருப்பிற்காய்
எத்தனை யுகங்களாய் எத்தனை சாவுகள்?
எத்தனை அழிவினூடும் எத்தனை எழுச்சிகள்!
கோடானுகோடி உயிர்ப்பொருள் கொண்டமைத்தனர்
இந்த இருப்பை.
வரலாற்றின் நகர்வுகளில்
ஆயிரம் கோடி மின்னல்கள் ஒன்றாய்
அவர்களின் தலையில் இறங்கின.
கால காலமாய்க் கொடும்பனி பொழிந்தது.

கவிதை

## ஓடிச் சென்ற ஈழவனுக்கு ஒரு ஐரோப்பியனின், உண்மைகூறல்

கி. சிவஞானம்

இருப்பினுமவர்கள் தமதும், நமதும்
இருப்பில் உறுதிகொண்டு
நிமிர்ந்து நின்றனர்.
நிறைவாய் இருந்தனர்.
நாளை உன் தேசம் பேரன் செல்வான்
வாய் பிளப்பான்.
இப்போதங்கும் மனிதர்கள்
தமது இருப்பை
எம் முந்தையர் போலவே
உறுதி செய்கிறார்களன்றோ!
எனவே அன்று
உன் பேரன், உன்னை உரித்து
பரி நிர்வாணமாக்கி
பரி சோதிப்பான்;
உனக்கு 'முதுகெலும்பு ஏனற்றுப் போனது'
என்று.
வாயைப் பிளந்து நிற்கும்
ஈழ நண்பனே!
வழி விடு
பயணம் தொடர வேண்டும்.

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் பாதுகாவலர்கள். மக்கள் புலிகளோடு இரண்டறக் கலந்து நிற்கின்றார்கள். ராஜீவ் காந்தி எமது தேசத்தின்மீது படையெடுத்து, எமது மக்களை அடிமைப்படுத்தி, தனது ஆக்கிரமிப்பை வெளிக்காட்டியபோது அதனை எதிர்த்துத் தொடுத்த புனிதப் போர்தான் அன்னை பூபதியின் சாகும் வரை உண்ணாவிரதம்.

பூபதி அம்மாவின் புரட்சியினால் உலகம் ராஜீவ்காந்தி அரசின் கபட நாடகத்தை அறிந்து கொண்டது.

மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. தமிழீழத்தில் மக்கள் புரட்சி வெடித்தது.

மட்டக்களப்பில் மக்கள் வாய் திறந்து கதைப்பதற்கு பயந்திருந்த ஒரு சூழ்நிலையில் துணிந்து போராட்டத்தை முன்னெடுத்தவர் அன்னை பூபதி.

அன்னை பூபதி தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அணையாத தீபம்.

திரு. வி. கருணா அவர்கள்.
சிறப்புத் தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
மட் - அம்பாறை மாவட்டம்

19-03-1992

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**போராட்டத்தோடும் அதன் விளைவுகளோடும் இனங்காட்டும் கவிதைகள்:**

மேற்கு வானத்திலே செம்பரிதிக் கோளம் மெல்ல மெல்லக் கடலினுள்ளே ஆழ்ந்து கொண்டிருக்கிறது. நீலப் பேராழி அதனை அரவணைக்கும் பேராவலோடு தனது அலைக்கரங்களாலே தாளமிட்ட வண்ணம் வரவேற்புப்பா பாடுகிறது. ஆழியின் தண்ணிய நீரைத் தொட்டபடி வெண் மணற்பரப்பு நீண்டுகிடக்கிறது. மாலைக் காலத்தின் மெல்லிளங்காற்றுத் தம் உடல்களைத் தழுவும் மகிழ்ச்சியிலே கடற்கரையில் உலாப்போய் மகிழ்வார்சிலர்; சிலர் தமது காலுளைவினைப் போக்கக் கடலில் சிறிது இறங்கி நீரை அளைந்து சுகம் காண்பர். மற்றும் சிலரோ பாதுகாப்பானது எனக்கருதும் கடற்பரப்புவரை சென்று நீரைத் துளைந்தாடி, நீந்திக் களிப்பர். வேறுசிலரோ படகுகளைச் செலுத்திய வண்ணம் கடலின் ஆழப்பரப்புவரை அஞ்சாது சென்று மீன்பிடிப்பதில் ஈடுபடுவர்.

மனிதசமுதாயமும் ஒரு கடல்தான். அது அமைதியோடு அழகுக்காட்சி தருகையிலே கரையில் நின்று அதன் எழிலையும் வீசும் காற்றின் இனிமையையும் இரசித்து மகிழ்வார் போலச் சமுதாய அமைதிக்காலத்தில், காதலையும் வாழ்வின்பங்களையும் பாடி மகிழ்பவர் கவிஞர்களில் ஒருசாராராயிருப்பர். சிறிது சமூக உணர்வோடு சமூகத்தை எட்டி நின்று பார்க்கும் கவிஞர்கள் சமூக நலந்தீங்குகளை ஓரளவு தொலைப்பார்வையாக வெளிப்படுத்துவர். தமக்குப் பாதுகாப்பு என்ற நிலையினை உறுதி செய்து கொண்டு சமூகக் கடலின் நீந்தித் திளைப்பாராய்த் துணிவோடு எதார்த்த உண்மைகளைப் பாடவல்ல கவிஞரும் இருப்பர். கடலின் விரிவுக்கும் ஆழத்துக்கும் முகங்கொடுத்த வண்ணம் வாழ்விற்காகப் படகைச் செலுத்திடும் மீனவர் போன்றார், எதார்த்தத்தின் எல்லை வரை சென்று சமூகத்தின் குறைநிறைகளைக் கூறுவதோடு அமையாது பங்காளராயும் அமைந்து மக்களை மேலேற்ற முற்படுவர்.

சமூக அமைதிக்காலக் கவிஞர்களை மேற்குறித்த நான்கு பிரிவுகளுள்ளும் அடக்கி விடலாம். போராட்டம் என்ற பேய்ச்சூறாவளி சமுதாயக் கடலிலே சுழன்றடித்துக் கடல் நீரினை மத்திட்டுக் கடையக், கடலலைகள் தயிர்த்துளிகள் போல வானம் வரை எழுந்து தெறிக்க, சூழவர இருளும் துயரும் இழப்பும் அழிவுமே நிறைந்திருக்கும் வேளையிலே, கடற்

கட்டுரை

## எண்பதுகளில் ஈழத்து தமிழ்க் கவிதைகளின் போக்கு

சொக்கன்

கரையை அணுக அஞ்சுபவராய்த், தமது எழுதுகோலைத் தூர வீசிவிட்டு என்ன நேருமோ எது ஆகுமோ என்று அஞ்சிநடுங்கிக் கொண்டிருப்பவர்தாம் அமைதிக்கால அழகுக்கவிஞர். கரையில் நின்று கால்களை அளைந்து தம் உளைவு போக்குவார் போலத் தொலைவில் நின்று கனவு கண்டு அக்கனவினைக் கவிதையாக்கும் கூட்டம் முற்றாக விலகாது. ஆனால் இவ்விரு சாரா ராலும்சமூகத்திற்கு எவ்விதபயனும்இல்லை. பாதுகாப்பெல்லைவரை சென்று நீந்தும் வெளிக்கவிஞர்கள் எதார்த்த உண்மைகளை எடுத்துரைக்கத் தயங்கார். குமுறும் கடலிடையே சென்று மீன்பிடிப்பதுபோலத் தம் இனமாகிய பெருங் குடும்பத்தின் நலனுக்காக எதார்த்த நிலையினை எடுத்துரைக்கும் அதே உணர்வோடு, களங்காணவும் முனைந்து நிற்பவர்களே களக்கவிஞர்கள். இவ்விரு சாராரதும் கவிதைகளே போராட்டத்தோடும் அதன் விளைவுகளோடும் தம்மைப் பெருமளவிலோ, முழுமையிலோ இணங்காட்டவல்லன.

இவ்வகையில் வெளிக்கவிஞர்களாய் உள்ளவர்களில் ஒரு சிலரின் கவிதைகளை ஒரு கலம் பாலில் ஒரு துளிபோல எடுத்து நோக்குவோம். இவர்களுள் மூத்த முதல்வராய் முதலில் நோக்கவேண்டியவர் கவிஞர் இ. முருகையன் உலகமே வீடாகவும் உலகினர் யாவரும் ஒரு குடும்பமாகவும் அமைதல் வேண்டும் என்ற உயர்குறிக்கோளை வரித்துக் கொண்ட இவர், இன்று கண்முன்னேயுள்ள நடப்பியல் உண்மையையும் புறக்கணிக்காது அதனை உளமாரப் போற்றும் வகையிலே போர்க்காலக் கவிதைகளை இயற்றி வருவது வரவேற்கத் தக்கது. இவருடைய கவிதைச் சொல்லாட்சியிலே எளிமை முழுமையாய் அமைந்து விடுகிறது என்று சொல்ல முடியாவிட்டாலும், வீச்சும், கூர்மையும் குறைவில்லாது அமைந்திருக்கின்றன என்று தயங்காது சொல்லலாம். சொல்லும் கருத்தை நேர் முகமாகக் கூறாது படிமங்களினூடு சொல்வது மூலம் கவிதைக்கு ஓர் ஆழத்தன்மையையும் இவர் வழங்கிவிடுகின்றார். பத்துத் தலையிராவணனும், பெண்முகக் காமதேனுவும், ஆயிரம் விழியமைந்த இந்திரனும் முதலான குறியீடுகளை, தமிழில் அமைந்துள்ள உள்ளுறையுவமங்கள், இறைச்சிப் பொருள்களாகிய படிமங்களை விளங்கிக் கொள்வது - ஓரளவு இது மிகைபடுகூற்றாக நவீன காலத்திறனாய்வாளருக்குத் தோற்றலாம் - எளிதானால், இக்காலக் குறியீடுகளையும் படிமங்களையும் விளங்கிக் கொள்வதும் அரிதான செயலன்று. இப்படிவ அமைவிற்த எடுத்துக்காட்டாக முருகையனின் பின்வரும் பாடலை நோக்கலாம்.

''சுற்றி நின்ற வேலி
சுருக்கென்று சீறிற்றாம்
நட்ட நடு இரவில் —
நாலுபேர் காணாத கன்னங்கரி இருட்டில்
காற்சட்டை போடாமல்
தோட்டத்துள் வேலி நுழையத் தொடங்கியதாம்
வேலி
பயிரை எல்லாம்
மேய என்று போயிற்றாம்
மேயத் தொடங்கி
விறுக்கென்று சப்பிற்றாம்
மேல் இருந்த கொப்புகளை வாரி இழுத்து
வளைத்து முறித்தெறிந்து
வேரோடு வாங்கிப் பிடுங்கி மிதித்ததாம்
ஓங்கி உதைத்துத் துழக்கிப் பொடியாக்கித்
தீங்கு பரத்திச் சிதைத்ததாம் தோட்டத்தை.
பற்றாத பச்சைப் பயிர்கள் என்றும் பாராமல்
பெற்றோலை ஊற்றி நெருப்பும் கொழுத்திற்றாம்!
வேலி கடித்து மிதித்தபயிர்க் குப்பைகளும்
வெந்து பொசுங்கிப் புதைந்து கரியாகி
நொந்து சுருண்டு —
வெறுஞ்சாம்பலாய்ப் போயினவாம்'''

வேலியே பயிரை மேயும் கொடுமையின் பயங்கர வெளிப்பாடுகளைத்தான் நாம் இன்று அநுபவிக்கின்றோம். கவிஞர் கேட்பதுபோல் "வேலிக்குப் பயிர்கள் மேலே வெறுப்புத்தான் இருக்கும் என்றால், வேலி ஏன்? காவல் ஏனோ? காவலோ வேலியாலே?" என்றுதான் நமக்கும் கேட்கத் தோன்றுகின்றது.

இக்காலத்தின் கவிதத்துவம் மிக்க வெளிக் கவிஞர்களுள் சோ. பத்மநாதன் (சோ.ப.) குறிப்பிடத்தக்க ஒருவர். படிமத்தில் இவருக்கும் பற்றுண்டு ஆனால் அதனைத் தமது பாதுகாப்புக் கவசமாக இவர் அணிந்து கொள்ளாமையை இவரின் பாடல்களிலே நாம் காணக்கூடியதாயிருக்கிறது. சமகால அவலங்களினால் நொந்து போன உள்ளத்திலிருந்து விம்மியெழும் குரலாக இவர் கவிதைகள் வெளிப்படுகின்றன.

"எங்கள் நகரேன் எரியுண்டு போகிறது?
உங்களுக்கு - சத்தியமா - ஒன்றுந்
தெரியாதோ?
"ஏதுக்கு நீயிந்தப் பேச்சை எடுக்
கின்றாய்?
காதுக் கருகில் நின்று கத்தித் தொலைக்
கின்றாய்!
"தீபாவளியா? திருக்கார்த் திகைநாளா?
கோபாவே சத்தில் கொளுத்தஇது
கூடலா?
"முற்றுகையு மில்லை மூண்டபெரும்
போருமில்லை
எற்றுக்கப் பாநம் நகரம் எரிகிறது?"
"நள்ளிரவு வேளையிலே நாட்டிலே
தேர்தலெனில்
சொல்லிவைத் தாற்போலச் சுரீரென்
றெரிகிறதே!"
"பாதுகாப் புக்குப் படைகள் குவிந்
திருக்கும்
போதுதீப் பற்றும் புதினம் நடக்கிறதே"
"எங்கள் நகரேன் எரியுண்டு போகிறது?
உங்களுக்கு - சத்தியமா - ஒன்றுந் தெரி
யாதோ?"
"தனக்கடாச் சங்கதியில் தலையிடுதல்
வீண்வேலை
மினக்கேடு போடா, போ வேலை எனக்
கிருக்கு!"
"பாயில் தொடங்கி நூலகமும் பற்றி
எங்கள்
கோயில் கடையெல்லாம் கொளுத்தப்
படலாச்சே"
"பற்றி எரிவதுயாழ்ப்பாண நகரமல்ல
பெற்ற வயிறுந்தான் பேசா திருமகனே!"

எங்கள் கலைக்கோயிலான யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், தேர்தற் காலத்தில், ஆட்சிபீடத்துக் கொடும்பேய்கள் தீப்படுத்திப் பரிதாசமுற்ற வேதனைக் கால நிகழ்ச்சிகளை விண்டுரைக்கவும் முடியாமல், விண்டுரைத்தால் பிள்ளைக்கும் ஆபத்தென்று அஞ்சி அந்த நெருப்பையெல்லாம் தன் வயிற்றிலே தாங்கிக் கொண்ட தாயின் அடங்கிய குமுறலாக இப்பாடல் அமைந்திருக்கக் காணலாம்.

ஆட்சியாளரின் பக்கச் சார்பான நடவடிக்கைகளால் ஈழத் தமிழரினம் தனக்குரியனவாயிருந்த பலவற்றையும் படிப்படியாய் இழந்தது. இவ்வாறு இழந்தவற்றில் ஒன்று எம் பிள்ளைகளின் உயர்கல்வி உரிமை. 'தரப்படுத்தல்' என்ற பேய் கட்டவிழ்த்து விடப்பட்டதால், பெரும்பாதிப்பினை அடைந்த இளைஞர் பலர் புத்தகம் ஏந்தவேண்டிய கைகளிலே துப்பாக்கிகளை ஏந்தவேண்டிய, வரலாற்றுத் தேவைக்கு இதுவும் ஒருவகையில் வழிசமைத்தது. இவ்வுண்மையினை ஈழம் பெருமைப்படத்தக்க கவிஞர்களுள் ஒருவரான காரை. செ. சுந்தரம்பிள்ளை வெளிப்படுத்தும் வகை இது;

தரப்ப டுத்தலால் திசைதி ரும்பியோன்
தந்தி ரத்தினால் வாழ்வி ழந்தவன்
அரிய மேதையாய் வரவி ருந்தவன்
ஆயி னும்புதுப் பாதை செல்கிறான்
கூரிய பாதையோ அல்லவோ என
உலக மேஇதை நீயு ரைத்திடு

*பெரிய லட்சியம் கொண்ட அன்னையின்*
*பிரிவி லேபய ணந்தொ டங்கினான்*
*கடகட கட கடக டவெனக்*
*ககன மெங்கணும் இடியி டித்தது*
*சடசடசட சட ச டவெனச்*
*சந்து பொந்தெலாம் மழைபொழிந்தது*
*தடதடதட தகிட தகிடதீம்*
*தாண்ட வம்பஞ்ச பூத மாடின!''*

''உரிய பாதை எது?'' என்று உலகத்தின் பதிலுக்குக் கவிஞர் விடுத்தாலும், அந்தப் பாதை எது என்பதை எம் இளைஞர் உறுதியாக முடிவுசெய்து விட்டதை நிகழ்காலம் எமக்குக் காட்டிக் கொண்டே இருக்கின்றது. பாஞ்சாலியும் பாண்டவரும் சூளுரை பகர்ந்ததைத் தொடர்ந்து, 'ஓமென் றுரைத்தனர் தேவர்-ஓம் ஓமென்று சொல்லி உறுமிற்று வானம் என அதுகாலை நிகழ்ந்தவற்றைக் கூறிப் 'பாஞ்சாலி சபதத்தை' முடிக்கும் பாரதி பாணியில் தமது சிறுகாவியத்தை முடிக்கின்றார் கவிஞர். இவர்கள் வரிசையிலே படிமத்திற்கு முதன்மையளித்துத் தென் மராட்சிக்கே உரிய பேச்சுவழக்குச் சொற்களைக் கையாண்டு வெளிக்களக் கவிஞர் வரிசையில் கல்வயல் வே. குமாரசாமி நல்லிடம் வகிப்பதும் சுட்டியுரைக்க வேண்டியதே. இவர்கள் போலவே கவிஞர்கள் ச. வே. பஞ்சாட்சரம், நாக. சிவசிதம்பரம் முதலியோர் இக்கால கட்டத்தின் சிறந்த வெளிக்கவிஞர்களாய்த் தமது உள்ளக் குமுறல்களை ஆற்றல் நிறைந்த கவிதைகளால் வெளிப்படுத்தி வந்தாலும் இது வரை அவர்களின் கவிதைகள் கவியரங்கேறிப் பவனி வந்துள்ளனவேயன்றி நூல் வடிவம் பெறவில்லை. இவ் விடயத்திலே கவியரங்கங்கள் பற்றிய எனது மனப்படிவினை ஒரு வெண்பாவினில் புலப்படுத்த விரும்புகிறேன்.

*''ஓசை மிகுந்திருக்கும் உள்ளத் துடிப்*
*பிருக்கும்*
*பாசையில் யாப்புப் பதைபதைக்கும் —*
*கூசவே*
*செய்யும் வெடிச்சிரிப்புச் சேர்ந்துவரு*
*மின்னுமே*
*மெய்யும் இருக்குமாம் மேல்''*

வெளிக்கவிஞர் வரிசை இவ்வாறாகக் களக்கவிஞர்கள் சிலரை நோக்குவோம். 'தமிழே உயிரே வணக்கம் தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்' எனக் கனிந்தும், பல்காலும் தமிழுக்கும் ஈழத் தமிழருக்கும் எதிரான எவரையும் எவற்றையும் சங்காரம் செய்ய இடியாய் முழங்கியும் வருகின்ற காசி. ஆனந்தன் என்ற கவிவாணனை அடுத்து, களக்கவிஞர்களில் இன்று ஈடும் எடுப்பும் அற்று விளங்குபவர் புதுவை இரத்தினதுரை என்பது எதார்த்த உண்மையாகும். அவர் ஒரு காளமேகம். இடியும் மின்னலும் பொழிவுமாகக் கவிதைகள் பொழிந்து காட்டாற்றுவெள்ளமாகி இன்னும் பல்லாண்டுகள் தமிழ்ப்பயிரைச் செழிக்க வைக்கும் வல்லமை அவருக்கு உண்டு.

1974இல் தமிழாராய்ச்சி மாநாட்டின் பேரால் அரசு ஒன்பதுயிர்களைப் பலி கொண்டது; 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளிலே இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஈழத் தமிழரின் உயிர், உடமை, மானம், செல்வம் என்ற அனைத்தையும் சூறையாடியது. 1980 ஆம் ஆண்டிலே இவை தமது உள்ளத்திலே கிளர்ந்தெழச் செய்த எரிமலைத்தீயை இவ்வாறு கொட்டுகிறார் புதுவை.

*''இருமொழி ஒருநா டென்று*
*இதுவரை இருந்த நீதி*
*தெருவினிற் கிடக்கு தம்மா*
*தேசியம் என்ற பிள்ளை*
*கருவிலே சிதைந்த காட்சி*
*கண்களில் தெரியு தம்மா*
*பெருத்தோர் வகுப்பு வாதப்*
*புயலடித் தோய்ந்த தம்மா*

பூட்டிய அறைக்குள் நாணம்
பூசிய நிலையில் தன்னை
மீட்டிடும் கணவன் மட்டும்
மிதந்திடும் ஓடை தன்னில்
ஆட்டைவெம் புலிகள் தின்னும்
ஆய்க்கினை நிலையில் நூறு
சேட்டைகள் செய்தா ரந்தோ
செத்தவர் தமிழர் பெண்கள்.

வாயினாற் பேசக் கூட
வரையறை யுண்டு குட்டை
நாயினைக் கொல்லக் கூட
நமக்கொரு நீதி உண்டு
ஆயினும் தமிழ னென்றால்
அவனுயிர் உடைமை எல்லாம்
தீயினால் எரிந்த செய்தி
சிங்கள நாட்டில் தர்மம்!''

இரண்டாவது கவிதையில் பெண் வீணையாகவும் ஓடையாகவும் ஆடாகவும் ஒரே சமயத்தில் உருவகிக்கப்படுகின்றாள். இவ்வாறு அமைவதை ஆங்கிலத் திறனாய்வாளர் கலப்புருவகம் (*Mixed Metaphor*) என்பர். பேராசிரியர், வி. செல்வநாயகம் கலப்புருவகத்திற்கு எடுத்துக் காட்டாக, மணிவாசகரின் 'வெஞ்சேலனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு நைஞ்சேன் நாயேன்' என்ற அடியைக் காட்டியது நினைவில் வருகிறது. ''வலைப்படுத்தல் மீனுக்குரியது. ஆனால் 'நாய்' வலைப்படுத்தப்படும் பிராணியன்றெனினும் பெருங் கவிஞனின் உணர்ச்சிப் பெருக்குக் கூற வந்த பொருளின் முதன்மைக்கேற்பவும் உணர்விற்கேற்பவும் கலப்புருவகத்தைப் பயன்செய்தது'' என்று அவர் விளக்கம் தந்தார். அந்த விளக்கம் புதுவை கையாண்ட கலப்புருவகத்திற்கும் பொருந்தும்.

யாப்பின் கட்டினை உடைத்துக் கொண்டு பாய்ந்தாலும் உள்ளத்திலிருந்து பாடும் களக்கவிஞர்கள் வரிசையிலே கணிப்பிற்குரியவர் கவிஞர் வாஞ்சிநாதன். களமும் கவிதையும் அவருக்கு இரட்டைப்பிள்ளைகள். அவரின் உள்ள வேதனையை வெளிப்படுத்தும் பாட்டு இது. மாவீரத்தியாகி திலீபனின் உண்ணா நோன்புக் காலத்தில் உடனுறைந்து அவருக்கு உற்றுழி உதவி அவரின் பிரிவைக் கண்டநுபவித்த வேதனையுணர்வினை வாஞ்சிநாதன் புலப்படுத்தும் வகை இது.

''எத்தனை பெரிய இழப்பினைத் தாங்கு —
வோம்
இத்தனை துயரம் எமைவிட்டுத் தீருமோ?
சத்திய மேன்மை சமாதியாய் ஆனதோ?
புத்தொளி மண்ணில் புதையுண்டு போ —
னதோ?
எங்கள் திலீபன் இனிவர மாட்டானோ?
தங்க மண்ணுக்குத் தாலாட்டுப் பாடியவன்
பொங்கும் தமிழுக்குப் பூமாலை சூடியவன்
திங்கள்போல் மீண்டும் திரும்பிட மாட் —
டானோ?
பத்தரை மாற்றுப் பவுனொன்று போ —
னதோ?
சித்திரை நிலவு சிதைவுற்றுச் சென் —
றதோ?
இத்தனை கொடுமை எப்படித் தாங்குவ —
தென்று
அத்தனை மக்களும்... .. கதறினர் ..... —
ஏங்கினர்.''

இக்கட்டுரை 80களின் தமிழ்க் கவிதைகள் பற்றிய முழுமையான ஆய்வினைக் கொண்டதல்ல. எனினும், அக்காலக் கவிதைகள் தொடர்பான சில முன்வைப்புகளைக் கொண்டிருப்பதனால் இதனைப் பிரசுரிக்கின்றோம். இது தொடர்பான விமர்சனங்களையும், சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்களையும் எழுதுங்கள். வெளிச்சம் பிரசுரிக்கும்

(இன்னும் வரும்)

காட்சி 1

(தூரத்தில் கடலலைகளின் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது கடற்கரைக்குச் சற்றுத் தள்ளி அமைந்திருந்த ஒரு குடியிருப்பின் குடிசை முற்றம்)

பொன்னம்மா: (வானத்தைப் பார்த்துவிட்டு, தனக்குள்) மாலை வெள்ளியும் மறைஞ்சு போச்சுது... (குளிருக்கு உடம்பை ஒரு முறை சுருக்கி) ஆ... இப்பிடிக் குளிர் ஊசி மாதிரிக் குத்துது .. ம்... இதிலை நிக்கிற எனக்கே இப்பிடியெண்டால் கடற்கரையிலை காவலுக்கு நிக்கிற பிள்ளையளைக் குளிர் என்ன பாடுபடுத்தும்... முந்தியெண்டால்......

இந்தப்பனியும் நிலவும் வாற இரவுகள் மனதுக்கு எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்கும்...... கடலுக்காலை நிலவு பறுவத்திலண்டைக்கு மெள்ள மெள்ளத் தலைநீட்டிறதைப் பார்க்க அதே ஒரு தனிச் சந்தோசம்...இப்ப.. ... ம்...... (பெருமூச்சு)

நான் எங்கடை செத்துப்போன சந்தோஷங்களைப் பற்றி யோசிச்சுக் கொண்டிருக்கிறன் காவலிலை நிற்கிற பிள்ளையள் சாப்பிட்டிட்டுதுகளோ தெரியயில்லை......

(முன் ஒழுங்கையால் சைக்கிள் ஒன்று வருகிறது)
ஓ... சாப்பாடு கொண்டு வாற பெட்டை போலை கிடக்குது...
(நன்றாகப் பார்த்து) ஓ... அவள் தான்...பிள்ளை ஆரடி......
ராதாவே...

நாடகம்

# தேசத்தின் வருடல்

யோ. எழிலி

ராதா: ஓமணை... (சைக்கிளை நிறுத்துகிறாள்)

பொன்: சாப்பாடு எடுத்துக் கொண்டு போறியே?

ராதா: ஓமணை... இண்டைக்குக் கொஞ்சம் பிந்திப் போச்சுது .....

பொன்: என்னடி மேனை கறி...?

ராதா: கத்தரிக்காய்... கோவா... அப்பளம்...

பொன்: எலும்பு வளருற வயதல்லே...... உதுகளைத் திண்டு என்னத்தை?...

ராதா: ஒவ்வருநாளுமே... இருந்திருந்திட்டு இப்பிடியும் சாப்பிடத் தானே வேணும்...

பொன்: ம்... (பெருமூச்சுடன்) கடலுக்கை போனால் சுட்டுத் தள்ளுறான்... வன்னியாலை ஆடுமாடு கொண்டு வர ஏலாமல் வழியிலை குந்தியிட்டான் யமன் மாதிரி... ஆன கறிபுளிக்கு என்னத்தைத் தான் செய்யுறது...

ராதா: உதெல்லாக் கஷ்டங்களையும் இல்லாமல் செய்யத்தானே... நாங்கள் சண்டை பிடிக்கிறம்...

பொன்: நீ முன்னுக்குப் போடி பிள்ளை... புளிமாங்காய் போட்டுக் கொஞ்சம் சூடை தீய்ச்சனான்... கொண்டு ஓடி வாறன்... (ராதா புறப்படச் சற்று உரத்து) நான் தான் வருவன்... பிறகு துவக்கை நீட்டிப் பிடிச்சுக் கொண்டு 'ஆரது' எண்டு வெருட்டாதையுங்கோ...

ராதா: (போய்க்கொண்டே...) உதுக்கெல்லாம் வெருளுற கட்டையே நீங்கள் நான் போட்டு வாறன்...

காட்சி 2

(சற்றுக் கிட்டவாக, இடையிடையே மட்டும் அலையோசை கேட்டுக்கொண்டிருக்கிறது. பெரிய சவுக்கு மரங்கள் சிலவற்றிற்குக் கீழுள்ள ஒரு காவல் அரண்)

(ராதா கொண்டு வந்து சைக்கிளை விட்டு விட்டு சாப்பாட்டைக் கையிலெடுக்க அது சரிந்து விழுகிறது)

தேவி: சைக்கிளை மணலுக்கை சைற் ஸ்ராண்டிலை விட்டால் விழும் தானே... மக்கு எடுத்து மரத்தோடை சாத்து...... என்ன சாப்பாடு?

ராதா புட்டுத்தான்...

மதி: புட்டோ...... சரிதான் புட்டைத் திண்டிட்டு சென்றியிலையிருக்க நித்திரை கண்ணைச் சுழட்டிக் கொண்டு வரப்போகுது... சரி... சரி... நான் பார்க்கிறன்... நீங்கள் இரண்டு பேரும் முதல் சாப்பிடுங்கோ...

தேவி: இரா முழுக்கத் தண்ணி தண்ணியாய் விடாய்க்கப் போகுது... ம்... எடு சாப்பிடுவம்...

ராதா: பொறடியப்பா... பொன்னம்மா ஆச்சி மீன் கறி கொண்டு வாறனெண்டவ...

மதி: உனக்கு நாக்கு நல்லாய்த் தேடுது தான்..... பாவம் தன்ரை சாப் பாட்டுக்கே கஷ்டப்படுற கிழவி...

ராஜு: நான் கேட்கயில்லையக்கா... அவவாய்த்தான்...

பொன்: (வந்து கொண்டே) என்ரை கஷ்டத்தைப் பற்றிக் கவலைப்படுறி யள்டியாத்தை... உங்கடை கஷ்டத்தைப் பற்றி நான் கவலைப்படக் கூடாதே..?

மதி: இது என்னணை கஷ்டம்.....? கடமையைச் செய்யுறம்... விடுதலை யின்ரை பெருமையை உணராட்டில்தான் கடமை ஒரு கஷ்டம்... எங்களுக்குக் கடமை ஒரு பெருமை...

பொன்: கடமை... ம்... (பெருமூச்சு விட்டு) பிள்ளை... என்ரை குடிலிலை நான் தலைவைச்சுப்படுக்கிறதெண்டால்... நாளைக்கு நான் செத்த பிறகு என்ரை மையம் கிடந்து நாறிப் போகாமல், நாயிழுத்துப் பிய்க்காமல் என்ரை சுடலையிலை (அழுத்தமாக) என்ரை சுடலையில கட்டை வேகுமெண்டால் .. அது உங்களாலை .. உங்கடைகஷ்டங்க ளாலை...

மதி: உங்கடை கட்டை மட்டுமில்லை எங்கடை கட்டையும் இந்த மண் ணிலை தான் வேகுமணை...

பொன்: பிள்ளை வாய் தடுமாறிக்கூடி அப்படிச் சொல்லாதையடா... நீங்கள் வாழ்றதாலைதான் நாடு வாழுது.. நாங்கள் வாழுறம், எங்கடை சனங்கள் வாழுது...

மதி: ஆச்சி! (சிரித்து) பயப்பிடாதையணை... நான் செத்தாலும் நாங்கள் வாழுவம் ஓ நாங்கள் வாழுவம்...

பொன்: சரி... சரி முதல் நீங்கள் சாப்பிடுங்கோ ..... மதி ... நீயும் வா பிள்ளை.....

மதி: முதல் இவை சாப்பிட்டும்... நான் காவல் பார்க்கிறன்....

பொன்: (கனிவுடன்) மேன்ன... நீ போய் புட்டைத் திண்டிட்டுக் கொஞ்ச நேரம் அண்ணரபிள்!...... காவலை நான் பார்க்கிறன்..... போ..... போடா .....

மதி: (உணர்ச்சி வசப்பட்டுக் கண்கலங்கி) ஆச்சி..... (பொன்னம்மா மதி யின் தலையை வருட) ஆச்சி... நீங்கள் வாஞ்சையோடை என்ரை தலையைத் தடவயுக்கை தேசமே ஆசையோடை என்ரை தலையை வருடுற மாதிரிக் கிடக்குது... ஆச்சி உங்கடை கையள் என்ரை சொக்கைத் தடவயுக்கை தமிழினமே என்னைப் பாசத்தோடை கட்டியணைக்கிற மாதிரிக் கிடக்குது......

பொன்; என்னடி பிள்ளை நீ சொல்லுறாய்...?

மதி; ஆச்சி... நீங்களும், உங்களைப் போன்ற ஆக்களும் தாற ஆதரவு தான் எங்களை நிமிர்ந்து நிற்க வைக்குது... கொடிய எதிரிக்கு முன்னாலை குமுறி எழுகிற ஆற்றலைத் தருகுது

நாங்கள் தேச விடுதலைக்காக ஒரு தாயையும், தகப்பனையும் பிரிஞ் சம்... எங்களுக்குத் தேசம் முழுவதுமே தாய்மார், தந்தைமார் சகோ

தரங்கள், இருக்கினம் எண்டு நினைக்கயுக்கை நெஞ்சு உணர்ச்சியாலை நிரம்பி வழியுது...

பொன்: பிள்ளை! கண்ணைத் துடையடா... நான் எப்பவும் உங்கடை தாய் தான்... (உணர்வை மாற்றி) ம்... ம்... நீங்கள் சாப்பிடுங்கோ ... (பொன்னம்மா வெளியே எழுந்து வந்து மணலில் அமர்கிறாள்)

தேவி: ஆச்சி... என்ன இருந்தாப் போலை வெளியிலை போய் இருக்கிறா...

மதி: கொஞ்சநேரம் பார்... நான் ஆச்சியை என்னண்டு கேட்டுக் கொண்டு வாறன்...

ஆச்சி... நாங்கள் ஏதாவது உங்கடை மனம் நோகிற மாதிரிச் சொல்லிப் போட்டமே...?

பொன்: நான் ஒருதாய் தான்... உங்களுக்கு மட்டுமில்லை ஒரு மகனுக்கும் தாயாயிருந்தன்... எனக்கு உங்கடை வயதிலை ஒரு மகன் இருந்தான்...

ராதா: ஆச்சி... உங்களுக்கு ஒரு மகன் இருக்கிறாரே...?

பொன்: இருந்தான்... (பெருமூச்சுடன்) ஓம்... இருந்தான்... ஆனால் நெடுக அவனாலை இருக்க முடியாமல் போச்சுது...

மதி: ஏனணை... என்ன நடந்தது...?

பொன்: அவனும் இந்த மணலிலை.... இந்த நிலவிலை.... இந்தப்பனியிலை ஓடித்திரிஞ்சவன்தான்...... இந்தக் கையாலை சோறு வேண்டித் திண்டவன்தான்... அவன்ரை தலையையும் ஆசையோடை தடவினனான் தான்...... ஆனால்...

மதி: ஆனால்......

பொன்: அங்கை பார் அந்தக் கோறைப் பூவரசு.... அதுக்குப் பக்கத்திலை இருக்கிற கரை நிலம்... இதிலை தான் எங்கடை பூட்டன், பேரன், மாமன் நாங்கள் எண்டு பரம்பரையாய் வள்ளம் கட்டினம்...... வலை காயப் போட்டம்... மீன் நோண்டி உப்புப் போட்டம்... ஒரு நாள் அதிலை நிண்டு தான் கைகாட்டி.... (விம்மி அழுகிறாள்)

மதி: (பதட்டத்துடன்) ஆச்சி...

பொன்: (அழுகையுடன்) கையைக்காட்டிக் கடலுக்கு அனுப்பி வைச்சன்...

## காட்சி 3

(பல வள்ளங்கள் கடலுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. ஓரிரு வள்ளங்கள் செல்கின்றன)

(வேலுப்பிள்ளை, மகன் செல்வம், உதவியாள் இராசையா ஆகியோர் வலைகள் முதலியனவற்றை ஏற்றிக் கொண்டிருக்கின்றனர்)

பொன்: மேனை கடல் அண்டைக்கும் ஒரு நாளைப்போல இராது.... கவனமடா...... இஞ்சாருங்கோ......

வேலு: நீ கவனம்... கவனமெண்டு அவனைத் தொழில் பழக விட்டிடாதை... நீ... வாமேனை வள்ளத்தைக் தள்ளு...
(மூவரும் சேர்ந்து வள்ளத்தைக் தள்ளுகின்றனர். தள்ளும் போது 'ஓ' என்னும் ஒலி)

பொன்: பன்பையுக்கை சர்க்கரைக்கட்டி பிறம்பாய் வைச்சிருக்கிறன்... அரிசிப் புட்டோடை தின்னுங்கோ...... தண்ணி ரீயூப் எடுத்தனீயளே...

வேலு: ஓமோம்...... நீ ஏறடா மேனை...... நாங்கள் போட்டு வாறம்...... இராசையா... இஞ்சினை இழு... சன்னதியானே நீ தான் துணை...

செல்: அம்மா...... போட்டு வாறம்......

காட்சி 4

(வள்ளம் கடலில் போய்க்கொண்டிருக்கின்றது)

இரா : அண்ணை...... பருத்துறைக் கோரி மறைஞ்சிட்டுது...

வேலுப்: இஞ்சினைக் குறை.... மேனை...... பாகக்குண்டை எடுத்து விடு......
(செல்வம் பாகக்குண்டை நீருக்குள் விடுகிறான்) என்ன மண்தட்டுதே...

செல்: இல்லையையா...... தேடுகப் போகுது......

வேலு: பாகமீயாக் கடலுக்கு வந்திட்டம்......

இரா: (திடீரென) அண்ணை ..... அண்ணை அங்கார்...... செவ்வல்...

வேலு: ம் .. மேனை கொடியைப் போடு...... கொடியைப் போட்டிட்டு வலையைப் படுத்துவம்......

இரா: அண்ணை... தம்பி சுக்கானைப் பிடிக்கட்டும்... .. நான் வலையைப் படுத்திறன்... தம்பீ இஞ்சை வா......

வேலு: மெல்லக் கிழக்கை வெட்டிப் பிடி... . வெட்டச் சொன்னால் ஒரேயடியாய் வெட்டிறதே...... மூளையைப் பாவியுங்கோடா......

இரா : அண்ணை வலை படுத்துவம்...

வேலு: ம்... ம்... மெல்ல... தொழிலைக் கவனமாய்ச் செய்யுங்கோடாப்பா... ஒவ்வருநாளும் சொல்லுறதே... தொழிலைத் தெய்வமெண்டு நினையுங்கோடாப்பா......
(வலை படுத்தி முடிகின்றது)
இஞ்சினைக் கிடத்து...... இனிச் சாப்பிட்டிட்டு ஒரு கண் நித்திரை கொள்ளுவம்......

செல்: இராசையாண்ணை...... இந்தாருங்கோ ..... சக்கரை...

வேலு: எனக்கும் ஒரு கட்டி தா......
(மூவரும் சாப்பிடுகின்றனர்)

செல்: (பதட்டத்துடன்) ஐயா... அங்கை ஏதோ... கறுப்பாய்த் தெரியுது....

இரா: அண்ணை... தேவி போலை கிடக்குது...
(வ்வோர்க்கஸ்லையிற் அடிக்கப்படுகின்றது)

செல்: ஐயா... லையிற்று சுத்திக் கொண்டு இஞ்சாலை தான் வருது...

வேலு: இராசையா...... இஞ்சினை ஸ்ராட் பண்ணிப் போட்டு, சுக்கானை வேண்டிப் பிடி...

இரா: அண்ணை... லையிற் எங்களுக்கு நேரை வந்தவுடனை அப்பிடியே நிண்டிட்டுது...

வேலு: இனி ஆபத்து...... இஞ்சினை றேயிஸ் பண்ணிப் பிடி வள்ளத்தை முருங்கைப் பிட்டிப் பக்கம் விடு...

செல்: ஐயா... கிட்ட வாறான்... (சூட்டுச் சத்தம் கேட்கிறது)

வேலு: சுடத்துவங்கியிட்டான்... (சூடு செல்வத்துக்கு விழுகிறது, ஐயோ..... என்ரை பிள்ளைக்குச் சூடு பட்டிட்டுது...... வள்ளத்துக்கை விழுந்து படுங்கோ...... சன்னதியானே எங்களைக் காப்பாத்து ..... ஐயோ...... என்ரை தோள்மூட்டிலை ஈரமாய்....... இரத்தம்.... ஐயோ...... (நேவி வள்ளம் அருகில் வருகிறது. மூவரையும் நேவி வள்ளத்தில் ஏற்றி விட்டு படகைக் கட்டியிழுத்துச் செல்கிறார்கள்)

## காட்சி 5

(பொன்னம்மா கடற்கரையில் பேப்பருடன் இருக்கும் காட்சி மீண்டும்)

பொன்: நடந்த விஷயம் எதுவுமே எனக்குத் தெரியாது... வழக்கம் போலை நான் விடிக்கு வெளிக்கிட்டு கடற்கரைக்குப் போனன். வள்ளங்கள் ஒவ்வொண்டாய் வரத்துவங்கிச்சுது... கடலைக் கண்ணாலை அளந்தபடி காத்துக் கிடந்தன்... ஆனால்... ஆனால்... எங்கடை வள்ளம் மட்டும் வரவேயில்லை......

ஓடியோடி எல்லாரையும் விசாரிச்சன்...... ஒருத்தருமே காணயில்லை எண்டிட்டினம் .....

நேரம் பத்து, பதினொரு மணியாகத்தான் என்ரை நெஞ்சிலை இருந்த பதட்டம் எல்லாரிலையும் பரவத்துவங்கிச்சுது...

இப்பிடி இருக்குமோ, அப்பிடி இருக்குமோ எண்டு அங்கலாய்ப்புகள்... கடைசியிலை பத்துப்பன்னிரண்டு வள்ளங்கள் தேடி வெளிக்கிட்டுது... நேரம் ஆக ஆக நெஞ்சிலை ஒருபயம் உருண்டு, பிரண்டு அடைச்சுக் கொண்டிருந்தது......

காத்துக் கொண்டிருந்தவை ஒவ்வொருத்தராய்க் கலையத்துவங்கிச்சினை...... ஆனால் நான்...... நான் மட்டும் அந்தக் கோவிற் பூவரசுக்குக் கீழை குந்திக்கொண்டிருந்தன்... ஒவ்வொரு அலையும் எழும்பி விழுயுக்கை அடுத்த அலையின்ரை உச்சியிலை ஒரு வள்ளம் தெரியாதோ எண்ட ஏக்கம்......

மதி: வள்ளம் வந்ததே ஆச்சி...

பொன்: மைம்மல் பொழுதிலை தேடிப் போன வள்ளங்கள் ஒவ்வொண்டாய்த் திரும்பி வந்திது... ஒருதன் மட்டும்......

எங்கடை கொடியையும், வலையையும் மட்டும் கொண்டந்தான்...... குழறினன்...... கதறினன்......

மதி: பிறகு அவை வரவேயில்லையே......

பொன்: வந்தார்... வந்தார்... ஒரு நாளில்லை... ரெண்டு நாளில்லை... நாலு வருஷத்துக்குப் பிறகு......

அண்டைக்கு கந்தசாமி கோயில் எட்டாம் திருவிழா......
அவரும் பிள்ளையும் காணாமல் போனதிலையிருந்து நான் கோயிலுக்குப் போறதையே விட்டிட்டன்......

விடியப்பறம்... வடக்கு வீதியிலை மேளச்சமா நடந்து கொண்டிருந்தது...... எங்கடை வீட்டுக்கு சத்தம் கேட்டுது...... அப்பதான் திடீரெண்டு படலை விடுற சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழும்பினன்......

காட்சி 6

(பின்னணியில் நாதஸ்வர இசை கேட்டுக் கொண்டிருக்கிறது)

(வேலுப்பிள்ளை மெலிந்து, தாடி வளர்த்த கோலத்துடன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, பரிதாபமாக முற்றத்தில் நிற்கிறார்)

பொன்: (தடுமாறி) ஆர்... ஆரது . நீங்கள்...... நீங்கள் இப்பிடி...... ஐயோ தாடி வளர்த்து...... இது என்ன கோலம்...... இந்தக் கோலத்திலை காணவே நாலு வரியமாய்க் கண்மூடாமல் காத்துக் கொண்டிருந்தன்.. சன்னதியானே உன்ரை கண்ணுக்கு முன்னாலை இந்தக் கொடுமையெல்லாம் நடக்குதே .. .. ஐயோ .....

வேலு: பொன்னம்மா...... அழாதை...... இந்த நிலையிலையெண்டாலும் வந்தன்... ஆனால்... என்ரை பிள்ளை......

பொன்: (பதட்டத்துடன்) பிள்ளை... என்ரை பிள்ளை... பிள்ளை எங்கை... என்ரை பிள்ளை எங்கை...

வேலு: (அழுகையுடன்) பிள்ளையையும்...... இராசையாவையும்......

பொன்: (பயம் கலந்த பதட்டத்துடன்) பிள்ளையையும்.. ... இராசையாவையும்...?

வேலு: நேவிக்காறர் சுட்டுப் போட்டாங்கள்...

பொன்: ஐயோ... என்ரை பிள்ளை... என்ரை ஐயோ... (குமுறி அழுகிறாள்)

வேலு: (அழுதழுது) சுட்டது மட்டுமில்லை...... காயத்தோடை தூக்கித் தங்கடை போட்டிலை போட்டாங்கள்... ஒரு ஒற்றைத்துணியாலை கூடி ஒரு கட்டுப் போட மாட்டனெண்டிட்டாங்கள்...... இரத்தம் போகப் போக என்ரை பிள்ளை என்ரை கண்ணுக்கு முன்னாலையே, 'தண்ணி, தண்ணி,' எண்டு கத்திக் கத்தியே உயிரை விட்டான்.....

பொன்: என்ரை பிள்ளை போட்டான்... ஐயோ... என்ரை பிள்ளை...

காட்சி 7

பொன்: பூசா முகாமின்ரை சித்திரவதையள்...... சொறியும் சிரங்குமாய், மாறாத இருமலாய் — அவரை வெறும் நடைப்பிணம் ஆக்கியிட்டுது... படுத்த படுக்கையிலை நோயின்ரை கொடுமையோடை, அவராலை ஒரு வருஷம் தான் உயிரோடை வாழ முடிஞ்சுது...

ஊர் கூடி ஒப்பாரி வைச்சுது...... ஆனால் நான்... அழுவேயில்லை...

ஏனெண்டால்... எண்டைக்கெண்டாலும் ஒரு நேவி போட் வெடிச்சுச் சிதற வேணும்... அதை என்ரை கண்ணாலை பார்க்க வேணும் அதைப் பார்க்க முடியாமல் கண்ணீர் என்ரை கண்களை மறைச்சிடக் கூடாது...

மதி: ஆச்சி...... நம்பிக்கையாய் உங்கடை ஆசை நிறைவேறும் நம்பியிரணை. எணேய் நிலவு உச்சிக்கு வந்திட்டுது... இனி நீங்கள் போய்ப் படுங்கோ.. ...

பொன்: நித்திரை... அது எங்கை வாறது... ம்... அவங்கள் சிதறிச்சாகிறதைப் பார்த்த பிறகு தான் நிம்மதியாய் நான் நித்திரை கொள்ளுறது.... (பெரும் வெடிச்சத்தம் ஒன்று கேட்கிறது)

மதி: (சந்தோஷத்துடன்) ஆச்சி... ஆச்சி... அங்கை கடலுக்கை பாரணை .

பொன்: பெரிய நெருப்பு...... கறுப்புக்கறுப்பாய்ப் புகை...... பிள்ளை என்ன நடந்தது... நெருப்பு ஆகாசமளவுக்கு எழும்புது...

தேவி: கரும்புலி புகுந்திருக்குது போலை கிடக்குது......

பொன்: (கவலையுடன்) அப்பிடியெண்டால் எங்கடை பிள்ளையளும்......

மதி: ஆச்சி...... பெரிய வெற்றியளுக்காக சில இழப்புகளைச் சந்திக்கத் தான் வேணும்......

(பொன்னம்மா அழுகிறாள்)

மதி: ஆச்சி...... ஆச்சி...... ஏன் அழுகிறியள்...?

பொன்: பெரிய பெரிய வெற்றியளுக்காகப் பிள்ளையள் சாகுதுகள்... என்ரை பிள்ளை ஒரு பிரயோசனமுமில்லாமலே செத்துப் போனான்......

மதி: அப்பிடி இல்லையணை...... இப்படியான இழப்புகள் தான் எங்களுக்கு உணர்வைத் தந்தது...... இப்படியான இழப்புகள் தான் உங்களைப் பிரயோசனமான வாழ்வை வாழ வைக்குது......

(பொன்னம்மா கடலை நோக்கி ஓடுகிறாள்)

ஆச்சி... எங்கை ஓடுறியள்......

பொன்: (ஓடிப்போய் முழங்காலளவு தண்ணீரில் நின்று) என்ரை பிள்ளையைக் கொண்டவங்கள் சிதறிப் போறாங்கள்...... கொடியவங்கள் பொசுங்கிச் சாகிறாங்கள் ..... அதை நான் பார்க்கிறன்...... அதை நான் பார்க்கிறன்...

(பலமாக) டேய்... இது எங்கடை கடலடா... எங்கடை பூட்டன், பாட்டனெண்டு பரம்பரையாய் ஆண்ட கடலடா... இனி சேட்டையள் நடக்காது...... டேய் நாங்கள் இப்ப நிமிர்ந்து நிற்கிறம்...... எங்கடை தேசம் நிமிர்ந்து நிற்குது...... □□

எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்
ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம்
இங்கு தோன்றும் ஒவ்வொரு பிள்ளையும்
இறைவன் ஆவதை நாடுகிறோம்
இறைவி ஆகவும் இறைவன் ஆகவும்
இலங்கும் சூழ்நிலை தேடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

இறைமை நீதியின் எதிரி தூள்பட
எறியும் ஓர் கணை ஏவுகிறோம்.

வெண்மணல் மேவிய பனைவெளி எங்கும்
வீணையின் ஓசை பரவட்டும்
தண்கடல் மீது தோணிகள் ஓடி
தாவர சங்கமம் பெருகட்டும்
வயலில் பயிர்கள் நிமிரட்டும்
வானம் பொழிந்து குளிரட்டும்
தொழில்கள் ஓங்க விண்ணும் மண்ணும்
தூய்மை மேவி ஒளிரட்டும்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

கவிதை

# ஒவ்வொரு புல்லும் ஒவ்வொரு பூவும்

முருகையன்

வன்னி மண்ணின் காடும் குளமும்
மாடும் கன்றும் பாடுகிறோம்
மின்னும் மீன்கள் பாடும் வாவி
விளங்கும் கிழக்கைப் பாடுகிறோம்
சின்னஞ் சிறிய முல்லைப் பூவும்
சிறகு விரிக்கும் தாமரையும்
வன்ன வன்ன வெள்ளி மின்னும்
வான வெளியும் பாடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு நெல்லையும் நாடுகிறோம்
ஒவ்வொரு கல்லையும் தேடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்
ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம். □□

● ● ●

தமிழீழ நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் அழிக்கப்பட்டனர்; அடக்கப்பட்டனர். மக்கள் கொதித்தெழுந்தார்கள்.

அகிம்சையைப் போதித்த காந்தியின் தேசத்திற்கெதிராகத் தியாகத் தீயில் குதித்தார்கள்.

மட்டக்களப்பிலே மறத் தமிழ்த் தாயின் குலத்தினர் மலையாக எழுந்தனர்.

புனிதப் போரொன்றை பூபதி உருவில் தொடுத்தனர்.
அன்னையின் உணர்வை அந்நியர் அலட்சியம் செய்தனர்.
இன்று அந்நியப் படையினர் இங்கில்லை!
அன்னை பூபதி அழியாத நினைவாக நிலையான வரலாற்றில் புகுந்தாள்.
நினைக்கின்றோம் அன்னையை இந்த நினைவு ஏட்டின் மூலமாக.
பொங்கட்டும் தமிழுணர்வு!
புயலாக எழட்டும் விடுதலையின் வேகம்!

திரு. சி. கரிகாலன் அவர்கள்
துணைப்பொறுப்பாளர்
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

19-03-1992

சிறுகதை

அ. மலரோன்

# கருவறைகள்

என்னைப் பற்றி முதலில உங்களுக்குக் கொஞ்சம் அறிமுகஞ் செய்யிறன். நேற்று வடிவான ஒரு செடியில புதுசாப் பூத்திருந்தன். இப்ப வாடிப் போன மலராய் என்ர வாழ்வு முடியிற நேரத்தில, என்ர கடந்த கால அனுபவங்களைப் பற்றியும் நான் பிறந்து வளர்ந்த இந்த மண்ணைப் பற்றியும் உங்களுக்குக் கொஞ்சம் சொல்ல விருப்புறன்.

என்ர வாழ்க்கையோ கொஞ்சக் கால வாழ்க்கை. ஆனால் என்ர தாயான செடி, இந்த மண்ணில பிறந்து சில வருசங்கள் ஆகிவிட்டுது. அவள் சொன்னதால தான் இந்த மண்ணின்ர பெருமையையும், எங்கட தமிழ்மொழியின்ர செழுமையையும் என்னால விளங்க முடிஞ்சுது .

முந்தநாள் நானொரு மொட்டாக இருக்கேக்க எங்கட தெருவால பெரிய இசை முழக்கத்தோடயும், மிடுக்கான அணிவகுப்போடயும் கொஞ்ச ஆக்கள், கையில ஆயுதங்களோட போய்க்கொண்டிருந்தினம் அவையளுக்குப் பின்னால பேழையொண்டை ஏந்திக்கொண்டு ஒரு வாகனமும் போய்க்கொண்டிருந்திச்சுது. அந்த வாகனத்தைச் சுத்திப் பெரிய சனக்கூட்டமும் போய்க்கொண்டிருந்திச்சுது அதுல போன எல்லாச் சனத்தின்ர முகத்திலயும் சோகம் அப்பிக் கிடந்திச்சுது இந்த நிகழ்வின்ர அர்த்தம் எனக்கு விளங்காததால என்ர அம்மாட்ட விசாரிச்சன். அவளும் சோகமாக விக்கித்துக் கொண்டே ''இந்த மண்ணின்ர வீடுதலைக்காகவும் எங்கட சுதந்திரத்துக்காகவும் போர்க்களத்தில வீரத்தோட போராடி வீரச்சாவடைஞ்ச ஒரு வீரனர புகழுடம்பு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அவனுக்குள்ள மரியாதையோட எடுத்துச் செல்லப்படுது'' எண்டு சொன்னாள்.

''யாரிட்ட இருந்தம்மா இந்த மண்ணை விடுவிக்க வேணும்? ஆரம்மா எங்கட மக்களின்ர சுதந்திரத்தைப் பறிச்சது?'' என்ர சந்தேகங்களை அடுக்காக அம்மாட்டக் கேட்டன். அதுக்கு அவள் ''இந்த மண் ஆதியில இருந்தே தமிழர் வாழுற பொலிவான மண். பல தமிழ் அரசன்மார் இதை நல்லா ஆண்டதோட தாய்மொழியான தமிழையும் பாதுகாத்து வளத்தாங்

கள். பிறகு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எண்ட வெளிநாட்டுக்காரங்கள் தொடர்ச்சியா இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டாங்கள். கடைசியில ஆங்கிலேயர் இங்க இருந்து போகேக்க ஆட்சிப் பொறுப்பை பக்கத்து நாட்டைச் சேர்ந்த சிங்களவரிட்ட குடுத்தாங்கள். வெள்ளைக்காரங்கள் வர முதல் பக்கத்து நாட்டை ஆண்ட சிங்களவர் அவர்கள் போன பிறகு இந்த நாட்டையும் அதோட எங்கட தாய்மொழியான தமிழையும் சிதைச்சு சிங்களத்தை இங்கே புகுத்தத் தொடங்கினார்கள். இந்த அடாவடித்தனங்களைப் பொறுக்க ஏலாமல் எங்கட சனத்தின்ர இளைய தலைமுறை இருபது வருசங்களாக ஆயுதப்போரை நடத்தி வருகுது. அப்பிடியான ஒரு சண்டையில வீரச்சாவடைஞ்ச வீரனொருவன்ர உடம்புதான் இப்ப கொண்டு போகப்படுது'' எண்டு ஒரு கதையையே எனக்குச் சொன்னாள்.

என்ர அம்மாக்கு எப்பிடிப் பழைய வரலாறெல்லாம் தெரியுமெண்டு உங்களுக்குச் சந்தேகம் வருகுதா? எனக்கும் அப்பிடிச் சந்தேகம் வந்தது. அதை அம்மாட்டக் கேட்டபோது, தன்னைத் தாங்கி நிக்கிற மண்மாதா தனக்குச் சொன்னதாகச் சொன்னாள்

அம்மா சொன்ன அந்த நேரத்தில இருந்து எனக்கும் சிங்கள அடாவடிக்கு எதிராகப் போராட வேணுமெண்ட ஆசை ஏற்பட்டுது. நான் இப்பிடிச் சொல்லிறதால உங்களுக்குச் சிரிப்பு வரலாம். நானும் இந்த மண்ணில தானே பிறந்தன். எனக்கும் போராடுற ஆசை வருந்தானே. ஆனால் நான் என்ன செய்வன். எனக்கு உங்களைப் போல கையும் காலும் இல்லை. எப்பிடி நான் போர்க்களம் போய்ப்போர் செய்ய ஏலும்? என்ர உணர்வுகளை அழுகையோட அம்மாட்டச் சொன்னன். அதுக்கு அவள் ''மகனே! உன்னால போர் செய்ய ஏலாது எண்டுறது உண்மைதான். ஆனால் எங்கட குலத்தவரான எத்தனையோ மலர்கள் களத்தில வீரச்சாவடைஞ்ச மாவீரருக்குக் காணிக்கையாகி அவையளின்ர கல்லறையளுக்கு அஞ்சலி செய்யினம். எனக்கெண்டா அந்தப் பாக்கியங் கூடக் கிடைக்கேல்ல. எண்டாலும் உன்ர சகோதரங்களான என்ர பிள்ளையள் பலரை அஞ்சலிக்கு நான் அனுப்பி விட்டன். அதால பெருமையும் திருப்தியும் அடையிறன்'' எண்டு சொன்னாள்.

எனக்கும் 'கெதியிலமலராகி மாவீரர் கல்லறைக்கு அஞ்சலிக்காய்ச் செல்ல வேணும்' எண்ட துடிப்பு ஏற்பட்டுது. அம்மாட்ட அதுக்கு அனுமதி கேட்டன். அதுக்கு அவள் ''நாளைக்குக் காலையில வழமை போல மாவீரர் துயிலும் இல்லத்தில இருந்து இங்க யாராவது வருவினம். அவையள் அஞ்சலிக்கெண்டு மலர்களைக் கொய்து கொண்டு போவினம். அந்த நேரம் நீயும் புது மலராய் பூத்திருப்பாய். உன்னையும் அவையள் கொண்டு போவினம். இங்க இருந்து வீணாக் கருகி நிலத்துல விழுறதைக் காட்டிலும் இந்தத் தேசத்தின்ர விடுதலைக்காய் தன்னுயிரையே விட்ட மாவீரன் ஒருவன்ர காலடியில சேருகிறதே மேல்'' எண்டு உணர்ச்சியோட சொன்னாள்.

நேற்றுக் காலையில புதுசாப் பூத்த பொலிவோட கல்லறை செல்லுற கனவையும் சுமந்த காரணத்தால இரட்டிப்புப் பொலிவோட காணப்பட்டன். அந்த நேரம் என்ர சகோதரங்களும் புதுசாப் பூத்திருத்திச்சினம். அவையள் என்னோட சேர்ந்து தாங்களும் வருவமெண்டு சொல்லிக்

கொண்டிருந்திச்சினம். முந்தநாள் எனக்கு அம்மா சொன்ன எல்லாத்தையும் அவையளும் கேட்டுக் கொண்டு தான் இருந்தவை

கொஞ்ச நேரத்தால கூடையோட வந்த ஒருவர் என்னையும் என்ர சகோதரங்களையும் கொய்து தன்ர கூடையில போட்டார். நாங்களும் அம்மாட்டச் சொல்லிப் போட்டுச் சந்தோஷத்தோட போனோம். எங்களைக் கொண்டு போன அந்த மனிதர் தண்ணியில நல்லாக் குளிப்பாட்டினார். பிறகு எங்களை ஒவ்வொருவராக மாவீரரின் காலடிகளில இருத்தினார்.

தான் உணர்ச்சி பொங்க ஒரு மாவீரர் கல்லறையில அஞ்சலி செய்துகொண்டிருந்த நேரம் அந்தக் கல்லறைக்குப் பக்கத்தில சில பேர் வந்து கொஞ்ச நேரம் தலையைக் குனிஞ்சு மௌனமாய் நிண்டினம். பிறகு அவையள் எல்லாரும் ஒருமித்த குரலில் "உங்கள் கனவை நாங்கள் நனவாக்குவோம். இறுதி மூச்சு வரைக்கும் உங்களின் பணியைத் தொடருவோம் இண்டைக்கே அதுக்காய் ஆயுதம் ஏந்துவோம்" எண்டுவிட்டுப் போச்சினம். அந்தக் கணம் எனக்கு ஒரு உண்மை விளங்கிச்சுது. நாங்கள் அஞ்சலிசெய்து கொண்டிருக்கிறது கல்லறைகளுக்கில்லை கருவறைகளுக்கு. ஏனெண்டா அதுகள் புதுசு புதுசா போராளிகளை உருவாக்குது. உடனே அம்மாட்ட ஓடிப்போய்ச் சொல்ல வேணும் போல இருந்திச்சுது. ஆனால் என்ர கடமையை முடிக்க வேண்டியிருந்ததால நிண்டிட்டன்.

எங்களை இங்க கூட்டி வந்த மனிதர் இண்டைக்குக் காலையில வாடிக்கிடந்த எங்களை எடுத்துப் போட்டு எங்களைப் போல புதிய மலர்களை அஞ்சலிக்க இருத்தினார். என்ர தாய் நாட்டுக்கு என்னால முடிஞ்ச கடமையைச் செய்து முடிச்சதால இப்ப நான் நிறைவா இருக்கிறன். உங்கட தாய் நாட்டுக்கு உங்களால் முடிஞ்ச கடமையைச் செய்து போட்டீங்களா? நீங்களும் என்னைப் போல நிறைவா இருக்கிறீங்களா?

என்ர கடைசி ஆசையை உங்களிட்டச் சொல்லுறன். என்ர தாயிட்ட 'உங்கட பிள்ளையள் கல்லறையளுக்கில்லை கருவறையளுக்குத் தான் அஞ்சலி செய்யினம்' எண்டு சொல்லுங்கோ. □□

"எமது பிள்ளைகள் எம்மைப் பாதுகாக்கத்தான் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களால் நாம் பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே உள்ளது. ஆனால் எம்மைப் பாதுகாக்கவே வந்த இந்தியா, இன்று சிறிலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட்டது. இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இப்போரில் இறங்கியுள்ளோம். வீரமரணத்தைக் கண்டு நாம் பழகிப் போனவர்கள்! என் இறப்பை அடுத்தும் நோக்கை அடைவோம் ஒரு போதும் அன்னையர் முன்னணி தளராது"

19-3-1988 — அன்னை பூபதி அவர்கள்

கட்டுரை

# நடனமும் உளவியலும்

சபா. ஜெயராசா

உள இசைவு, மனவெழுச்சி இசைவு, சமூக இசைவு ஆகியவை உடல் இசைவுடன் இணைந்தவை. உடலியக்க இசைவு கல்வியியலிலே விரிவாக விளக்கப்படுகின்றது. புலன் உறுப்புக்களின் ஆற்றல், உள்ளார்ந்த சுரப்பிகளின் தொழிற்பாடு, நரம்புத் தொகுதியின் தொழிற்பாடு, குருதிச் சுற்றோட்டத்தின் திறன், எலும்பு, தசைநார்கள் என்பவற்றின் இயல்புகளுடன் உடலிசைவு தொடர்புடையதாகும். நடனக்கல்வி மேற்கூறிய உடலியக்க இசைவுகளை வளம்படுத்தும் வகையிலே வடிவமைக்கப்படுகின்றது.

நடனக்கல்வியிலே கலைப்பண்புகளும், உடலியக்கப்பண்புகளும் ஒன்றிணைக்கப்படுகின்றன. உடற்கட்டமைப்பு வழியான ''உரையாடலை'' நடனம் ஏற்படுத்துகின்றது. இந்த உரையாடலிலே தசைநார்களின் பலம் பங்கேற்கின்றது. உடல்வலுவின் பிரயோகம் சம்பந்தப்படுகின்றது. விரைந்த அசைவுகளும், தழுவும் அசைவுகளும் சம்பந்தப்படுகின்றன.

இவற்றின் வழியாக நடனம் ''சமநிலைகளை'' உருவாக்குகின்றது. சமநிலைகள் இரண்டுவகைப்படும். ஆடும் பொழுதும், அசையும் பொழுதும் ஏற்படுத்தப்படும் சமநிலை ''இயக்கச்சமநிலை'யாகும். நடராஜத்தாண்டவத்தின் பொழுது ஒற்றைக் காலில் நிற்கும்சமநிலையை ''நிலையியற் சமநிலை''க்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மருத்துவக் கல்விக்கண்ணோட்டத்தில் நடனக் கல்வியை ஆராய்ந்தவர்கள், நடனத்தின் வாயிலாக உடலுக்குரிய ஒட்சிசன் வழங்கல் அழகியல் உணர்வு நிகழும் சமகாலத்தில் அதிகரிக்கின்றதென்றும், இருதயத்தின் வினைத்திறன் மேம்படுகின்றதென்றும், இவற்றின் வழியாக மூளையின் கற்கும் திறன், ஞாபகத்திறன், முதலியவை விருத்தியடைகின்றதென்றும் குறிப்பிடுகின்றனர். மன நலமுடையோர் தமக்கும் பிறருக்கும் பயனுடையோராகின்றனர். வாழ்க்கைப் பிரச்சினைகளை வினையாற்றலுடனும், ஆக்க பூர்வமாகவும் அணுகுவதற்கு மனநலம் துணை செய்கின்றது. உடலியல் வரையறைகளை மீறிக்கற்றல் நடைபெறமுடியாதென்பது கல்வியியலிலே வற்புறுத்தப்படுகின்றது.

உடல் சார்ந்த நெருக்குவாரங்களைச் சமூகம் அங்கீகரிக்கத்தக்க வகையிலே வெளிப்படுத்த முடியாதவிடத்து உளவியற் பிறழ்வுகள் ஏற்படுகின்றன. மனவெழுச்சிகளை உடலியக்கங்களுடன் இணைத்து

வெளியிடும் சமூக அங்கீகாரத்தின் வழியாக நடனம் கவின் கலையாக உளவியல் நோக்கிலே வளர்ச்சியடைகின்றது.

சிக்கலான ஓர் உடலியக்கத்திறனைச் சிறுசிறு அலகுகளாக்கித் தொடுக்கும் நடத்தைப் பண்புகள் நடனக்கல்வியிலே முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு ஆற்றல்களைக் கற்பதற்குரிய பயிற்சி இத்தகைய ஏற்பாட்டினாற் பலப்படுத்தப்படுகின்றது.

நடனத்தில் யதார்த்தங்கள் படிமங்களாக மாற்றப்படுகின்றன. மனிதரது தொழிற்பாடுகளிலே ஒழுங்கும், அழகும் ஏற்படுத்தப்படுகின்றது. பொருள் உற்பத்தி முறைமை மாற்றமடைய, அதற்கியைந்தவாறு சமூக வாழ்க்கை ஒழுங்கமைக்கப்படும் பொழுது முன்னைய பொருள் உற்பத்தி முறைமையோடும் சமூக வாழ்க்கையோடும் இணைந்த நடனம் அழிந்து விடாமல் நிலைபெறுகொள்வதற்குரிய காரணியாக அமைவது யதார்த்தங்கள் படிமங்களாக மாற்றப்பட்ட அழகியற் செயற்பாடாகும்.

இதன் பின்புலத்திலேதான் ''நடனத்தின் நித்தியம்'' என்ற தொடர் விளக்கப்படுகின்றது. இந்தத் தொடர்பில் இந்திய மரபில் நடனம் தெய்வீகப்பண்புடையதாக மாற்றப்பட்டுள்ளமையை இணைத்து நோக்கப்பட முடியும்.

நடனத்தின் அறிகை சார்ந்த அணுகுமுறைகள் பின்வருமாறு காணப்படும்.

அ) பிரபஞ்சத்தின் இயல்பை விளங்கிக் கொள்ளல்

ஆ) பிரபஞ்சத்தில் மனிதனின் நிலையை நுணுகி நோக்குதல்

இ) மனிதரை மீறிய மேலாம் வலுவை அறிதல்.

ஈ) நல்லதும் தீயதும் தீர்மானிக்கப்படு மாற்றலை உய்த்தறிதல்.

உ) உடல் உள்ளம் என்பவற்றிலும் மேம்பட்ட ''ஆன்மா'' பற்றிய நித்தியத்தை முன்மொழிதல்.

உடலும் மனமும் ஒருமைப்படும் பொழுது அதற்கு அடுத்த கட்டம், யாது என்ற சிந்தனையானது நடனத்தின் வாயிலாகத் தூண்டப்படும் பொழுது. மேற்கூறிய அறிகை சார்ந்த எண்ணங்கள் மேலோங்குதலைத் தடுக்க முடியாது.

நடனம் ஆடிய பின்னர் நடனம் பற்றிய நினைவுகளும், மனப்பதிவுகளும் மனத்திலே நீடித்து நிற்றலால், மனித இறப்புடன் வாழ்க்கை முடிவடைந்து விடுவதில்லை என்ற கருத்தேற்றத்துக்குப் புராதன நடனங்கள் உதவலாயின.

நடனத்தின் பொழுது உடல் உள்ளம் தழுவிய மனிதனின் இயல்பானது உளம் - சமூகம் சார்ந்த மனிதப்பண்பாக மாற்றப்படுகின்றது. உடல் உள வெளிப்பாடுகள் சமூக இசைவாக்கத்தைச் சிறப்படையச் செய்கின்றன. அனைத்துச் சமூக நடத்தைகளும். ''கற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகள்'' என்பதை நடனம் புலப்படுத்தும், பின்பற்றுதல், இனங்காணுதல், ஒத்துழைத்தல், முரண்படுதல், என்ற செயற்பாடுகளின் வழியாக சமூக நடத்தைகள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயல் முறைகளோடு இணைந்தே ஆரம்ப கால நடனங்கள் விருத்தியடைந்தன.

நடனங்களின் உளவியற் பயன், கல்விக் பயன் பற்றி ஆராயும் பொழுது ''ஒழுப்கப்படுத்தல்'' என்ற செயல் முறையில் நடனத்தின் பங்களிப்புப் பற்றி விதந்து குறிப்பிடப்படுகின்றது. நேர் நடத்தைகள், மனோபாவங்கள், மனவெழுச்சி நிலைகள் முதலியவை ஒழுங்குபடுத்தலின் அகக்கூறுகளாக அமைகின்றன. அவற்றை உள்வாங்

ஞுவதற்கும், தொடர்புபடுத்துவதற்குரிய உளக்கிரகித்தலும், உடலியக்க அசைவும், நடனக்கல்வியிலே முதன்மைப்படுத்தப் படுகின்றன. உடல் அசைவுகளே ஒழுக்கத்தின் அடிப்படை அலகாகவும் கொள்ளப் படும்.

மனித உடலின் அசைவானது, உடல் அழகின் மேலோங்கலுக்கு அடிப்படையாகின்றது. நடனத்தின் பரிணாம வளர்ச்சியில் குரூரமான உடலசைவுகள் தவிர்க்கப் பட்டு வந்துள்ளன. குரூரமான உடலசைவுகள் தவிர்க்கப்பட்ட, மேம்பாடான நிலை பரத நாட்டியக்கலையிலே துல்லியமாக வெளிப்படுகின்றது.

மிகவும் கூடுதலான காலப்பகுதியை உள்ளடக்கிய பயிற்சியின் விளைவாகக் கற்றுக்கொள்ளப்பட்ட திறன்களின் அடிப்படையாக அழகியற் சுவையை வழங்கல் நடனத்தின் உளவியல் சார்ந்த தொழிற்பாடாகும். நீண்டகாலக்கல்விக்கும், பயிற்சிக்கும் பின்னர் வழங்கப்படும் அழகியலாக்கத்திலே சிக்கனம், சிறக்குமியல்பு, அழகியல் அறிகைத் தெளிவு, சீர்மிகு உட்பொருளமைப்பு, முதலியவை மேலோங்கி நிற்கும்.

உணர்வுகளை உடலியக்க வடிவங்களாக்குதல் நடனத்தின் உளவியற் பண்பாகின்றது. இவற்றின் வழியாக ஒருவரது உளப்பிரச்சினைகளுக்கும் நடனத்தின் வழியாக இசைவாக்கம் எட்டப்படும். உளநெருக்கு வாரங்களைத் தீர்க்கும் உபாயங்களுள் ஒன்றாக நடனம் கருதப்படுகின்றது. பூர்வீக நடனங்களுள் இந்தப் பண்பு மேலோங்கியிருந்தமையைக் காணலாம்.

''அசைவதற்காகக் கற்றுக்கொள்ளல்,'' ''கற்றுக்கொள்வதற்காக அசைதல்'' என்ற இரண்டு செயற்பாடுகளும் நடனத்தினூடாக வழங்கப்படுகின்றன. ☐☐

---

''இந்நாட்டை ஆளுகின்ற அரசு 'தமிழ் பேசுகின்ற எம்மை பிரதிநிதித்துவப் படுத்தாத அரசு' என்று உணரப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசைப் பற்றி சிந்தித்தார்கள். அது தவறல்ல... ஒரு அரசு தேவையென்று வந்ததும், அதனை நிறுவுவதற்கான ஒரு நிலப்பகுதி தேவையென்பதும் அடுத்த கட்டத் தேவையாகி வருகிறது. அந்த வகையில் அம்மக்கள் போராடத் தலைப்பட்டதும் சரியென்றே கருதுகின்றேன்.''

—சிங்கள ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் —

என் ஈழதேசமே......
உனக்கு விமோசனம் தரவேண்டிய
இளைஞன்
என்ன செய்கிறான் பார்த்தாயா?

விடுதலைப் போரிலே,
வேங்கைகள் உழைத்திடும் வேளையில்,
இந்த மண்ணில் இரத்தம் சிந்தி
இரவு பகல் துயில்வின்றிப் புலிவீரர்
போராடும் நாளில்,
இன்னொரு இளைஞன்
வீதிகளில் அலைகிறான்.
மாவீரர் வரிசை நீள்கையில்
அவ்விளைஞன் அளக்கும்
வீதியின் அளவும் நீள்கிறதே!

மானமறப் போர் வந்துவிட்டால்
புதுயுகம் படைப்போமென்று
மார்தட்டித் திரிந்த கூட்டம்
மாற்று மண்ணில் தவழ்கிறதே......
பின்னொரு நாள்
பாடுபட்டு ஒருவர் உழைத்ததிலே
பங்கு கேட்டு வருதல்
கொள்ளையன்றோ... கொடுமையன்றோ?

எல்லாளன் ஆண்ட மண்ணில்
இப்படியும் ஒரு நிலையா?
வேண்டாம்!
இனியநல் வாழ்க்கைக்கு இன்றே போராடு
வா என்னோடு
இந்த நிலத்தோடு இணைந்து விடு. □□

## தேசத்தை மறந்த இளைஞர்

ந. கண்ணன்

விளையாட்டுத் துவக்குடனும்
வீரத்துடிப்புடனும்
எதிரியை
அழிப்பதாய் அவர்கள்
படை எடுக்கிறார்கள்.
வானத்தில் —
ஏதும் கறுப்புகளைக்
கண்டு விட்டால்
பொம்மர்
வருவதாய்
பதுங்கிச் சுடுகிறார்கள்
ஓ......
அந்தச் சிறுவர்கள்,

நாளை
எதிரியைக்
களத்திலாட
இன்று
ஒத்திகை
செய்கிறார்கள்.
உனக்குத் தெரிகிறதா?...
அந்தச் சின்னக்
கரங்களால்
அடிமை எரிவதை.
உனக்குத் தெரிகிறதா......?
அந்தச் சின்னஞ்சிறு
விழிகளுக்குள்
ஒரு நாடு தெரிவதை. □□

## ஒத்திகை

மா. மயிலன்

# புதுநிலம்

நான் —
சைக்கிளில் நிழல் தேடியலைந்து
இலை உதிர்ந்த வேம்பின் கீழ்
வந்து களையாற
சூழலில் வெடிமருந்தின் வாடை,
வீதியின் முதுகில் கானல் நீர்.
வெயில் வெம்மை எங்கும் அறைந்தது.
காற்றேயின்றிக் ககனம் வெழுத்திருந்தது.
எதிரே தெரியும்
கடலின் அலைகளிடையே
அலையும் படகதிலே மனிதரில்லை.
அதில் தமிழர் இரத்தம்......
உறைந்து போன தமிழர் இரத்தம்;
சிதைந்தழியும் அவர்கள் சதைகள் ..
மீன்களின்றி
துவக்குகளின் எச்சங்களே குவிந்துள்ளன.
தமிழீழக் கடற்கரையின் நீள்பரப்பில்
உவர்நிலத்தில் துயரத்தின் கோடுகள்.
பலத்த வெடியோசை நெஞ்சினுள் அதிர
என் கண்கள் கடலில் ஊடுருவிற்று.
எங்களது, நிச்சயமாக
எங்களது கடலிலே
கருப்பாய்த் திமிங்கிலக் கப்பல் நிற்கிறது.
சிங்களப் பாடலும், எக்காளிப்பும்
அதிலிருந்து எழலாம் இப்பொழுதும்.
எனினும் எங்களது கடலே அது.
இந்த வேம்பு மீண்டும்
துளிர்ப்பதைப் போல......
மீண்டும் பூக்குமென்பதைப் போல ....
இந்தக் கடலிலும்
தொழிலுக்குப் போவோம்.
நெய்தலின் பாடலை நாங்கள்
பாடித் திரிவோம்.
எங்களின் கடலே! எங்களின் கடலே!! □□

## எங்களின் கடலே!

இத்தாவில். க. சிவராசா

# புதுநிலம்

திராவிட சமுதாயத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தமிழ் மக்களின் தனிப் பெருஞ் சொத்தான கர்நாடக இசையைத் தமிழீழத்தில் அன்று தொட்டு இன்றுவரை நலிவுறாமல் வளர்த்து வருபவர்கள் மங்கள இசைக்கலைஞர்கள்.

பாமரமக்கள் தொடக்கம் படித்தவர்கள் வரை எல்லோரையும் ஈர்க்கும் நாதஸ்வர வாத்தியத்தின் மூலம், கீர்த்தி பெற்ற தமது தந்தையார் இணுவில் கோதண்டபாணி அவர்களைப் போன்று நல்ல இசையை வளர்ப்பதிலும், அதை மக்கள் நயக்க அளிப்பதிலும் திறமையுடன் செயற்பட்டு வருபவர்கள் நாதஸ்வர சகோதரர்களான வி. கே. கானமூர்த்தி வி. கே. பஞ்சமூர்த்தி ஆகிய இருவருமாகும்.

கடினமென்று எதையுந்தள்ளி விடாது எமது இசையிலுள்ள நுணுக்கமும், ஆழமுமிக்க அம்சங்களையெல்லாம் செவ்வனே வெளிக்கொணரும் விடா முயற்சியும் பக்குவமும் உணர்ந்த பஞ்சமூர்த்தி அவர்கள் தனித்துவமானவர். தனது இசையறிவைக் காலத்துக்கும் சூழ்நிலைக்குமமைய மக்களுக் கெவ்வாறு பயன்படச் செய்தல் வேண்டுமென்னும் தேவையையறிந்து அவ்வழியிற் செயலாற்றுபவர் பஞ்சமூர்த்தி அவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் எமது மக்களுக்கு மூன்று அவசிய தேவைகள் உள்ளன. ஒன்று அவர்களுடைய வீர உணர்வையும் நாட்டுப்பற்றையும் இன உணர்வையும் தூண்டுதல். மற்றது போரினால் பாதிக்கப்பட்டு, வீடுகளையும் உற்றார் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து துயருடன் வாழும் மக்களுக்கு இசைமூலம் ஆறுதலளித்துக் காத்தல். மூன்றாவது எத்தகைய இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் மத்தியிலும் எமது வருங்காலத்தமிழ்ச் சமுதாயத்துக்கு அதன் கலைகளையும் பண்பாட்டையும் அவற்றின் பண்புகள் சிறிதளவும் சிதைந்துவிடாமல் பாதுகாத்துக் கையளித்தல்.

முதலிரண்டு தேவைகளையும் எமது கர்நாடக இசை நன்கு பூர்த்தி செய்யும் தகைமையுடையது. வீர உணர்வும், சாந்த உணர்வுமிக்க அம்சங்கள் எமது இசையில் ஏராளமுள்ளன. அதிலும் பண்பட்ட நாதஸ்வர வித்துவான்களுள் ஒருவரான வி. கே. பஞ்சமூர்த்தி இவையிரண்டையும் நிறைவேற்றி வருகிறாரென்பதுக்கடையாளமாக அவரது இசை பொதிந்த, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய இசையருவி நாடாவும்,

சுவைக்குறிப்பு

# பஞ்சமூர்த்தியின் வேணுகானம்

சுவாதித்திருநாள்

திருவிழாக்களிலும் மற்றும் வைபவங்களிலும் அவர் வாசிக்கும் விடுதலைப்பாடல்களும் சான்று பகர்கின்றன.

மூன்றாவது அம்சம் எமது கலைஞர்களின் கைகளிலேயே தங்கி உள்ளது. எமது இசையை முழுமையாகக்கற்று அதன் அடிப்படை சிதைந்துவிடாமல் அதைக் காப்பாற்றி வளர்த்து அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது அவர்களது பொறுப்பு.

மனதுக்கு இதமூட்ட வல்ல மென்மையான வாத்தியம் வேணு எனப்படும் புல்லாங்குழலாகும்.

இதையும், தனது விடாமுயற்சியினாலும், கடின உழைப்பினாலும் நன்கு பயின்று தரமிக்க இசையை அளிக்கும் நிலையிலுள்ளார் பஞ்சமூர்த்தி அவர்கள். இவரது புல்லாங்குழல் இசை அரங்கேற்றம் அண்மையில் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் இடம் பெற்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டுச் சுவைத்து அவரைப் பாராட்டியுங் கௌரவித்தும் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

இந்த வகையில் நாதஸ்வரத்துடன் புல்லாங்குழல் மூலமும் மக்களுக்கு விடுதலைஉணர்வு மேலோங்க, சேவையாற்றப் பஞ்சமூர்த்தி அவர்கள் பெரிதும் உதவுவார் என்ற நம்பிக்கையுண்டு.

□□

● ● ●

'வெளிச்சம்'
கலை, இலக்கிய சமூக இதழ்

அட்டைப்படம்:
கானகி [லோஜனா]

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

அச்சு:
ம. மரியதாஸ்

பூவிழி தீசுமந் தாடட்டும் — இங்கு
பூகம்பம் ஆரம்பம் ஆகட்டும்
விலங்குக ளோடிங்கு கலங்குவதோ? — தமிழ்
வீரத்தின் விளைநிலம் உறங்குவதோ?

எழுகவே! தமிழரே! எழுகவே!
புலிகளின் அணியிலே வருகவே!

அன்னைதந்தை வாழ்ந்ததிந்த நாடு — அவர்
அப்புஆச்சி கூடவாழ்ந்த வீடு
அன்புத்தங்கை கோலம் போட்ட முற்றம் — இதை
ஆளவேண்டு மென்பதென்ன குற்றம்.

எழுகவே! தமிழரே! எழுகவே!
புலிகளின் அணியிலே வருகவே!

சோற்றுக்காக வாழ்வதிங்கு கேடு — இனிச்
சுதந்திரத்தைத் தேடிநின்று பாடு.
ஆற்றுவெள்ளம் போலெழுந்து ஓடு — களம்
ஆடிவெற்றி கண்ட பின்னர் ஆடு.

எழுகவே! தமிழரே! எழுகவே!
புலிகளின் அணியிலே வருகவே!

உலகம்போற்றும் தலைவனுண்டு வருகவே — எங்கள்
உரிமைமீட்க உங்கள்பங்கைத் தருகவே
விலகியோடல் வீரமல்ல அறிகவே — உங்கள்
வீரமெதிரி காணவேண்டும் எழுகவே.

எழுகவே! தமிழரே! எழுகவே!
புலிகளின் அணியிலே வருகவே! □□

பாடல்

# ஒரு படை நடைப்பாடல்

புதுவை இரத்தினதுரை

சிறுகதை

கிரிஷா ஜொவித்தா

# நிமிர்தல்

தூக்கத்துடன் தோற்றுப்போய் நினைவுகளுக்குள் சிக்குண்டிருந்த நித்தியாவின் நரம்புகளை ஒரு கணம் செயலிழக்கச் செய்தது, அந்த அம்புலன்சின் 'சைரன்' ஒலி. முத்து முத்தாக வியர்வைத் துளிகள் தலையணையை நனைத்தன. 'சைரன் ஒலி அவளையும் மீறி அவள் கடந்த நினைவுகளை ஊடறுத்துத் தொலைவில் ஒரு வருடத்துக்கு முன்னால் தரித்தது.

எஸ்லோன் பைப்புகள், பூட்ஸ் கால்கள், அவளைச் சித்திரவதை செய்து சின்னாபின்னப் படுத்திய அந்த அந்நியப் பேய்களின் மறந்து போயிருந்த உருவங்கள் எல்லாமே நிழற்படமாய்த் தெரிய; அந்த இருட்டறைச் சுவர்களில் படிந்திருந்த இரத்தக் கறைகளைப் பார்த்த படி நினைவிழந்து போகும் நித்தியாவைத் தினமும் தட்டியெழுப்பும் அந்த 'சைரன்' ஒலி. அது கூட நினைவுகளில் தெளிவாகக் கேட்டது. இந்தமண்ணைத் தன் எழுத்துகளால் உயிர்ப்பிக்க முற்பட்டதற்காக அவலங்களைச் சுமந்து கொண்டவளுக்கு ஒரு வருடத்தின் பின் அன்று விடுதலை. ''என்ர ஆசை மகளுக்கு இப்ப மூன்று வயதாயிருக்கும்'' நித்தியாவின் நினைவுகள் தன் செல்ல மகள் சாதனாவையே சுற்றிச் சுறறி வந்தன. கூடவே தான் சுவாசிக்கப் போகும் அந்த செம்பாட்டுக் காற்று, தன்னை ஆவலோடு எதிர்கொள்ளப்போகும் நேசிப்புக்குரிய முகங்கள் எல்லாம் கற்பனையில் இனித்தன.

வெளியே வந்த அடுத்த கணமே அவையெல்லாம் இடிந்து போன இனிமைகளாய் மாற, ஒரு கணத்தில் சாக வேண்டும் என்று கூட கலங்கிப் போனாள். ஊரே இரண்டு நின்று அவளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டது. எல்லாமே நித்தியாவின் மனத்திடனின் முன் தோற்றுப் போயின. சாதனா நித்தியாவின் வேதனைப் புண்களுக்கு நல்ல மருந்தானாள். கனடாவிலிருந்து வரும் கணவன் டேவிட்டின் கடிதங்கள் அவளுக்கு வாழ வேண்டுமென்ற துணிவை ஊட்டின. திடீரென ஒரு நாள் அவன் வரப்போவதாகக் கடிதம் வந்தது. நித்தியா பூரித்துப் போனாள். அவனால் மட்டுமே உணரக்கூடியதாயிருக்கும், தன் உணர்வுகளை அவனிடம் கொட்டித் தீர்க்கத் துடித்துக் கொண்டிருந்தாள். மீண்டும் வீட்டைக் ''கடந்து

போன அம்புலன்சின் சைரன்' ஒலி நித்தியாவின் கடந்த நினைவுகளை விரட்டி அவளை நிஜத்துக்குள் இழுத்து வந்தது. ''எங்கயோ அடிபாடு போல, கடவுளே அவங்களக் காப்பாத்து'' மனதிலே அடிக்கடி வேண்டியபடி அப்படியே தூங்கிப் போனாள்.

● ● ●

அன்றோடு டேவிட் கனடாவால் வந்து ஒரு மாதம் ஓடிவிட்டது. அவனைக் கண்ட மகிழ்ச்சியில் சாதனா ஓடியாடி உலாவருவதை ரசிப்பதிலேயே நித்தியாவின் நாட்கள் கழிந்தன. டேவிட் முன்பு போலத்தான் சாதாரணமாகவேயிருந்தான் அந்த வீட்டிலே எதுவுமே நடக்காதது போலவும், தான் புதிதாக வந்தவன் போலவும்... நித்தியாவின் மனதில் இனம்புரியாத குற்ற உணர்வொன்று குடைந்து வருத்தத்தை உண்டாக்கியபடியிருந்தது. ''எல்லாத்திலும் சாதாரணமாயிருக்கிறவர் ஏன் என்னோட மட்டும் நல்லா மனம்விட்டு கதைக்கிற சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறார், ஒருவேளை இவர் கூட.... சீ... நிச்சயமாய், நிச்சயமாய் இருக்காது; இருக்கவும் கூடாது'' நித்தியாவின் மனம் ஈனமான குரலில் அழுதது.

டேவிட்டும் அவளும் சந்தித்துக் கொண்டது வித்தியாசமான நிகழ்வுகள், அவர்கள் இருவரின் காந்தம் மிக்க எழுத்துகளும் அவர்களை இணைய வைத்தன. ''டேவிட்'' அந்தப் பெயரின் பின்னால் நித்தியாவின் இலட்சியமே உருவாகியிருந்தது. எத்தனை புரட்சி எழுத்தாளன்! அவனது எழுத்துக்களின் வடிவங்கள் சமுதாயப் புண்களுக்கு மருந்தாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை. ''நித்தியா'' அவள் கூட டேவிட்டுக்கு சளைத்தவள் அல்ல. ஆக இருவரின் எழுத்துக்களுக்குமிடையே ''டேவிட்'' இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டுமென புரட்சியாய் வெடிப்பான். ''நித்தியா'' சமுதாயத்தின் யதார்த்த நிகழ்வுகளை அப்பட்டமாக, ஆனால் அமைதியாகச் சொல்வாள். துருவங்கள் இரண்டும் இணைந்து கொண்டன.

வாழ்க்கை பற்றிய எண்ணற்ற கற்பனைகளுடன் நித்தியாவின் புதிய வாழ்க்கை ஆரம்பமானது. எழுத்துக்களை வாழ்க்கை மூலம் நிஜமாக்க பெரிய சித்திரம் ஒன்றையே மனதில் தீட்டியிருந்தாள்.

அன்று அவள் முதற் தோல்வியைத் தன் வாழ்வில் சந்தித்த நேரமது. ''நித்தியா ஆர் என்ன சொன்னாலும் சரி நான் கனடாவுக்குப் போறது போறதுதான்'' உறுதியாகச் சொன்ன டேவிட்டின் கால்களைப் பிடிக்காத குறை, நித்தியா அழுதழுது களைத்துப் போனாள். ''உங்கட எழுத்துக்கள்...'' ஆரம்பித்த நித்தியாவைப் பேச விடாது டேவிட் இடைமறித்தான். ''நானும் நீயும் சந்தோசமாய் இருக்கோணும் எண்டால் அதுக்கு காசு, காசு, காசு வேணும்'' கற்பனையில் அவள் வரைந்த வாழ்க்கைச் சித்திரத்தில் யாரோ தாறுமாறாக நிறங்களைக் கொட்டுவது போலிருந்தது. இதற்குப் பிறகு நித்தியா எதுவுமே பேசவில்லை.

''அம்மா'' சாதனாவின் பிஞ்சுக் கைகள் நித்தியாவைத் தடவின. நினைவுகள் நிஜத்துக்கு வர ஆதரவாய் அந்தப் பிஞ்சுக் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். ''அம்மா, ரெண்டு மாமாக்கள் வந்திருக்கினம்'' சாதனா விறாந்தையைக் காட்ட ''ஓ... ராஜனும் வினோத்தும்'' சொன்னபடி அறைக் கதவைத் தாண்டும் போது நித்தியாவுக்கு மின்னலாய் ஒரு நினைவு தாக்க, சாதனாவின் காதுக்குள் மெதுவாக, ''அப்பாவையும் வரச் சொல்லுங்கோ'' சொல்லிவிட்டு விறாந்தைக்கு சென்று விட்டாள்.

''அக்கா, வேலையாவே இருந்தனீங்க''

ராஜன் தான் ஆரம்பித்தான் "இல்ல சும்மா தான்" அவள் சொல்லவும் டேவிட் விறாந்தைக்கு வரவும் சரியாயிருந்தது. டேவிட்டைப்பற்றி அவர்களுக்கு நித்தியா நிறையவே சொல்லியிருந்ததால், அவர்கள் புரிந்து கொண்டவர்களாய் இயல்பான சிறிய புன்னகையை முகத்தில் வரவழைத்தனர். அக்கா, நீங்கள் எழுதின 'உண்மைகள்' எண்ட கதையை நேற்றுக் கிடைச்ச பேப்பர் ஒண்டில வாசிச்சன். என்ன, கசப்பான உண்மைகளை தெட்டத் தெளிவாக் காட்டியிருக்கிறியள் அட்டகாசம்" இது ராஜனின் அபிப்பிராயம். "ஓம் நிஜத்தில ஏற்றுக் கொள்ள மறுக்கிற இந்த சமுதாயம் எழுத்துக்களில அதை மாலை போட்டு, பரிசளிச்சு வரவேற்கிது" விரக்தியாய் நித்தியாவிடமிருந்து எழுந்த வார்த்தைகள். "இல்லையக்கா ஒரு நாளைக்கு இந்த சமுதாயத்தில எழுத்துகள் தான் நிஜமாகப் போகிது." உறுதியாய் உரமாய்ச் சொன்ன ராஜனின் முகத்தில் ஏற்பட்ட உணர்வுகள். டேவிட் முகத்தில் எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாது; தனக்கும் அவர்கள் உரையாடலுக்கும் சம்பந்தமில்லாதவன் போலிருந்தது, நித்தியாவுக்கு இதயத்தினை வண்டு ஒன்று துளைப்பது போன்ற விசித்திர வேதனையை உண்டாக்கியது. "ஒரு வேளை இவர் கூட இந்த சமுதாயம் போல... இல்லை அப்பிடியிருக்காது." அடிக்கடியெழும் இந்த கசப்பான நினைவை மனதிலிருந்து எழவிடாமல் விரட்டிக்கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் சென்று வெகுநேரமாகியும் நித்தியாவும், டேவிட்டும் எதுவுமே பேசவில்லை. சாதனா தான் அவர்கள் இருவரிடையேயும் பாலம் போல தொழிற்பட்டுக் கொண்டிருந்தாள். டேவிட்டின் எழுத்துக்களில் நூல் வடிவம் பெற்றவை ஒரு புத்தக றாக்கை நிறையவும் அடுக்கப்பட்டிருந்தன. "ம்..... எத்தனை இனிய நாட்கள் அவை" நித்தியாவால் இப்படி பகிரங்கமாக பெருமூச்சுவிட மட்டும் தான் இப்போது முடிந்தது

"நித்தியா" டேவிட்டின் இந்த அழைப்புக்குரலில் அதிகாரமான இனம் புரியாத அழுத்தம் ஒன்று தெரிந்தது. என்ன என்பது போல நித்தியா ஏக்கமாக அவனைப் பார்க்க, "அப்போத வந்தவங்களைப் போல ஒவ்வொரு சாட்டுகளோட நெடுக இங்க ஆம்பிளையள் வாறது எனக்குப் பிடிக்கேல்ல" தெளிவற்று வெளிவந்த டேவிட்டின் வார்த்தைகளை விளங்கிக் கொள்ளவே நித்தியாவுக்கு நேரமெடுத்தது. "உன்ர எழுத்துகள் உன்னை நாசமாக்கினது இனிக் காணும். கடிதத்தில என்ர அக்காளவைடாவுக்கு உன்னைப் பற்றிக் கட்டுக்கட்டா எழுதினதையெல்லாம் சும்மா, கிழிச்சுக் குடைக்க போட்டது எவ்வளவு பிழை எண்டு இப்ப தெரியுது. இனி நீ ஏதாவது எழுதிறன் எண்டு சொன்னா?" டேவிட்டா இப்படியெல்லாம்? இது கனவாய் இருக்குமோ என்றுகூட நித்தியாவுக்கு ஐயமாயிருந்தது.

"ஏனப்பா இப்படி அநியாயமா குற்றம் சொல்லுறியள், அதுகள் என்ர சொந்தச் சகோதரங்களை விட மேலானதுகள் அதுகளப் போய்" அழுகையாய் வெடித்தது நித்தியாவின் குரல் "ஓ... என்னவிட உனக்கு அவங்கள் மேலாப்போயிட்டாங்கள்" குரூரமாய் ஒலித்தது டேவிட்டின் குரல். ஐயோ! கடவுளே ஏன் இப்பிடி என்னைச் சோதிக்கிறீர்" நித்தியாவுக்கு டேவிட்டை ஏறெடுத்துப் பார்க்கக் கூட வெட்கமாயிருந்தது. ஒண்டுமறியாத சாதனா பயத்தில் கதவுக்குப் பின்னால் மறைந்தபடி நின்றாள். கண்கள் இரண்டும் நீர்முட்டி பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

"நீ கெட்டுப் போனவள் எண்டு தெரிந்தும்

உன்னை ஏற்றன் பார் அதுக்கு எனக்கு நல்ல தண்டனை, அதுதானே உனக்கு வெட்கம் எண்டது இருந்தால்........" தொடர்ந்து வந்த டேவிட்டின் வார்த்தைகளைக் கேட்க முடியாது காதுகளைப் பொத்தினாள் நித்தியா. யார் யாரோ எல்லாம் முன்னால் சொன்னபோது கூட கவலைப்படாதவள், முதன் முதல்த் தன் கணவன் வாயால் அதைக் கேட்ட போது. "காதை நல்லாப் பொத்து ஊரே உன்னைப் பாத்துச் சிரிக்கேக்க, காறித் துப்பேக்க எங்க போய் ஒழிஞ்சனி?" இந்த வார்த்தைகள் நித்தியாவின் உறக்க உணர்வுகளைத் தட்டியெழுப்பின. "யாரோ மிருகங்கள் செய்த தவறுகளுக்காக அப்பாவிப் பொம்பிளையள் சாகோணும் எண்டா" தொடர்ந்து அவளைப் பேச விடாது விம்மல் தொண்டையை அடைத்துக் கொண்டது. முதல்த் தடவையாக எதிர்த்து எழுந்த நித்தியாவின் குரல் டேவிட்டை ஒரு கணம் அதிர வைத்தது. அதிர்வின் எதிரொலியாக நித்தியாவின் கன்னம் சிவந்து போனது. இது கூட அவளுக்கு புதிதில்லைத்தான்.

சலனமின்றி வெளிவந்தது நித்தியாவின் குரல்; "உங்கட எழுத்துகள் எத்தினை புரட்சிப் பூக்களை உண்டாக்கின. தயவு செய்து எல்லாமே போலியாப் போக இடங்கொடுக்காதைங்கோ" "என்னடி எழுத்துகள் எல்லாம் பொழுது போக்குக்கெண்டு அண்டைக்கு நான் எழுதினது. அதால வருமானத்தோட கூடப் பெருமையும் கிடைச்சிது அவ்வளவு தான்" பெரிதாகச் சிரித்த டேவிட்டின் சிரிப்பும் வார்த்தைகளும் நித்தியாவுக்குள் ஒரு பூகம்பத்தையே கிளப்பின.

"உங்கள மாதிரிப் போலி முகமூடிகள நம்பி இந்த சமூகம் ஏமாந்ததோட, என்னையும் நான் ஏமாத்திப் போட்டன்" முடிவாக வெளிவந்தன — அவள் வார்த்தைகள். ஆவேசமாய் எழுந்தவள், அவன் எழுதிய புத்தகங்கள் எல்லாவற்றையும் இழுத்துக் கீழே போட்டு... கண நேரத்தில் எல்லாம் சுவாலையாய் எரிந்தன. "அண்டைக்கு என்னைச் சின்னாபின்னமாக்கின அந்த ஜடங்களும் நீங்களும் ஒன்றுதானே; உங்களுக்கு என்ன வித்தியாசம்?" சொல்லிவிட்டு அழுது கொண்டிருந்த சாதனாவைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். அந்த நிகழ்வுகளைத் துளியும் எதிர்பாராத டேவிட் சற்றுக் கலங்கித்தான் போனான்.

"எத்தின நாளைக்கு உன்ர கற்பனை எழுத்துகள் உன்னைத் தாங்கிப் பிடிக்கிது எண்டு பாக்கத்தான் போறன். ஒரு நாளைக்கு நீ என்னெட்ட மண்டியிட்டு மன்னிப்புக் கேக்காட்டி என்ர பேரை நான் மாத்தி எழுதுறன்" ஆண் என்ற மமதையில் எல்லையற்று எல்லாமே சொல்லலாம், பொம்பிளையள் எண்டா போடுதடிதானே என்ற நினைவுடன் கொட்டிவிட்டு, பெட்டியோடு வாசலைக் கடந்து போய் விட்டான். சிலையாகிப் போன நித்தியாவுக்கு, நாளை சமுதாயம் தன்னைப் பார்த்து பரிகசிக்கப்போவது;

"இவள் புருஷனைத் துரத்தி விட்டிட்டு தன்ர இஸ்டத்துக்கு திரியிறாள் மானமுள்ள பொம்பிளையெண்டா அண்டைக்கே செத்திருப்பாள்" ஊரே திரண்டுவந்து முன்னால் நின்று சொல்வது போலிருந்தது. ஒரு கணம் கண்களை இறுக மூடித் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். சமுதாயத்தில் டேவிட்டைப் போன்று கிழிக்கப்பட வேண்டிய முக

மூடிகளின் எண்ணிக்கை எண்ணற்று நீண்டு தெரிந்தது. தன் பேனாவை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். எங்கட பிள்ளைகளின்ர கைகளிலிருக்கும் துப்பாக்கிகள் சுதந்திர தேச எல்லையை மீட்பதற்கும்; தன் கைகளிலிருக்கும் பேனா சுதந்திர தேசத்தை செழிக்கச் செய்வதற்கும் தேசத்துள்ளிருக்கும் களைகளை அகற்றவும் உயர்ந்து நிற்பதை நினைக்க நினைக்க நித்தியாவுக்கு உடலே புல்லரித்தது. இப்போது அந்த சைரன் ஒலி பூட்ஸ் கால்கள், எஸ்லோன் குழல்கள், மிருக ஜடங்கள்; ஒன் டேவிட்டின் நினைவுகள் கூட மறந்து போய் விட்டது. நினைவெல்லாம் எழுத்துக்கள், எழுத்துக்கள், எழுத்துக்கள். □□

## பிரபாகரன் ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகிறார்.

"நான் பிரபாகரனை மெச்சுகிறேன். பிரபாகரனை ஒரு மெச்சத்தக்க மனிதனாக் மக்கள் பார்க்கிறார்கள். சிறிய மனிதனாக 27 பேருடன் ஆரம்பித்து, ஓர் இயக்கமாக வளர்த்தெடுத்து, பத்து வருடங்களாக தனது அணியினரை நெறிப்படுத்தி, வழிநடத்தி இந்தியா, சிறிலங்கா ஆகிய இருதேசங்களின் படைகளை எதிர்த்து நின்றுள்ளார்.

பிரபாகரன் ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகிறார்"

— 'சண்டே ரைம்ஸ்' பேட்டியில் சிறிலங்கா அமைச்சர் திரு. தொண்டமான் அவர்கள்.

# S. S. R. RICE MILL

புழுங்கல் அரிசி
பச்சை அரிசி
தீட்டல் பச்சை அரிசி

விரும்பிய தரங்களில்
தேவையான அரிசி வகைகள் எதுவாக இருந்தாலும்
அவற்றை நம்பிக்கையுடன் தேர்வு செய்ய
உங்களுக்கு உகந்த இடம்

# எஸ். எஸ். ஆர். அரிசி ஆலை

உரிமையாளர்: சி. தர்மலிங்கம்

**முதலாம் கட்டை, டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

அன்றாட வீட்டுப் பாவனைக்கு ஏற்ற
எல்லாவிதமான பலசரக்குப் பொருட்களையும்
நியாய விலையிலும், தட்டுப்பாடின்றியும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

# "சித்திரா'ஸ்"

**சகலவிதமான பலசரக்குப் பொருட்கள் விற்பனையாளர்**

**'சித்திரா'ஸ்**

வழங்கும் அத்தியாவசியப் பொருட்கள் சேவை
மக்களை 'சித்திரா'ஸ் நிலையத்திற்கு வரவழைக்கிறது.

## சித்திரா'ஸ்

**முள்ளி வீதி,**
**அரியாலை.**

எப்பொழுதும் வீட்டு வேலைகள்
அதிகமாக இருக்கிறது
ஓய்வில்லையே என்று கவலைப் படுகின்றீர்களா?

குடும்பத்தை நிர்வகிப்பதற்கு
திட்டமிட்ட வேலைகளும், ஓய்வும் தேவை.
அப்போதுதான் மகிழ்ச்சியும்
நீடித்த வாழ்வும் கிடைக்கிறது.
எப்பொழுதும் வீட்டு வேலைகள்
என்று நினைத்து மனம் சோர்வுறுதல் கூடாது.
உங்களின் வேலைகளில் பாதியை
குமரன் கிறைண்டிங் மில் பங்கிட்டு உதவுகிறது.
நல்லமுறையிலும், விரைவாகவும்
திருப்திகரமாகவும் அரிசி, மிளகாய்,
உழுந்து மற்றும் தானிய வகைகளை
அரைத்துத் தருகிறது குமரன் கிறைண்டிங் மில்.

குமரன் கிறைண்டிங் மில்லில்
அரைக்கப்பட்ட தானியங்களின் உணவுப்
பொருட்கள் தனி ருசியைத் தருவன.

குமரன் கிறைண்டிங் மில்

மாவீரர் வீதி,
(பெருங்குளம் — மட்டுவில் வீதி)
கல்வயல், சாவகச்சேரி.

கோட்டா முறையிலும், குறைந்த அளவிலும்
நெல், புழுங்கல் குத்திக் கொடுக்கப்படும்.
நீண்ட காலமாக இந்தப் பணியில்
ஜெயலஷ்மி மில் மக்களின் தொடர்பும்
நம்பிக்கையும் கொண்டுள்ளது.

# ஜெயலஷ்மி அரிசி ஆலை

தரமான அரிசி விற்பனையாளர்களும்,
நெல் குத்திக் கொடுப்பவர்களும்.

அரிசி தரம் I, தரம் II
குத்தரிசி, பச்சை அரிசி என விரும்பியபடி
பெற்றுக் கொள்ளலாம்.

ஜெயலஷ்மி அரிசி ஆலை
யாழ் வீதி,
மீசாலை.

நம்பிக்கையான இடத்தையே எப்பொழுதும் மக்கள்
விரும்புவார்கள். பொருட்களுக்குப் பாதுகாப்பும்
திட்டமிட்டபடி அவற்றைக் கொண்டு செல்வதற்கும்
ஏற்றபடி சேவை செய்வதுதான் என்றும் எங்கள் வழமை.

உங்களின் பொருட்களை நீங்கள் விரும்பும்படி
எடுத்துச் செல்வதற்கு
என்றும் நம்பிக்கையுடன் உறுதுணையளிக்கிறது —
"அன்னம்ஸ்"

# அன்னம்ஸ்
## ரான்ஸ் போட்ஸ் சேவிஸ்

சந்தையடி,
சங்கானை.

மெக்கானிக் வேலைகள்
ரிங்கர் வேலைகள்
பெயின்ரிங் வேலைகள்
லொறிகளுக்கான பொ(B)டி வேலைகள்
என்பவற்றை மிகவும் நல்ல முறையிலும்
திருப்தியாகவும் செய்து கொள்ளுவதற்கு
யாழ்ப்பாணத்தில் திறமை மிகுந்தவர்கள்

# நியூ யாழ் டீசல் எஞ்ஜினியர்ஸ்

176, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.